ஒரு கிராமத்தின் கண்ணீர் கதை

(செய்திக் கட்டுரைத் தொகுதி)

கலைச்சுடர் என். இராமச்சந்திரா
சமாதான நீதவான்

உ

சிவமயம்

ஒரு கிராமத்தின் கண்ணீர் கதை

(செய்திக்கட்டுரைத் தொகுதி)

கலைச்சுடர் என்.இராமச்சந்திரா

(சமாதான நீதவான்)

வெளியீடு
அருள்சுரபி பதிப்பகம்,
தாளையடி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

07.06.2009

விலை ரூபா 250/=

சமர்ப்பணம்

எனது இளமைப் பராயத்தில்
என் மீது
அன்பு பாராட்டி அரவணைத்த
வடமராட்சி, அல்வாயைச் சேர்ந்த
என்னுடைய அன்புப் பேரனார்
அமரர் சு. கந்தையா
அவர்களுக்கும்
அன்புப் பேத்தியார்
அமரர் திருமதி க. பார்வதம்
அவர்களுக்கும்
இந்நூலைப் பணிவன்புடன்

சமர்ப்பணம்

செய்கின்றேன்.

வாழ்த்துரை

தாய் நாட்டுக்காக எத்தனையோ அர்ப்பணிப்புக்களைச் செய்துவரும் இன்றைய கால கட்டத்தில் தனது பணியும் தாய் நாட்டுக்கே என்று உறுதியான மூச்சுடன் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எழுத்துக்களில் உறுதியாகப் பேனாவைப் பிடித்து வருபவர் என். இராமச்சந்திரா என்ற எமது வேலணை நிருபர்.

எந்தவிதமான நெருக்கடிகள் வந்தபோதும் சளைக்காது தளராமல் தனது பேனாக்குமிழை உருட்டி எழுத்தோவியமாக்கும் திறமை அவருக்கே உரிய தனித்துவமாகும். அந்த வகையில் எழுதிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற அவரது தணியாத தாகம் வாசகர்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

எமது நாட்டில் உள்ள நிறை குறைகளை கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக எமது பத்திரிகையான வீரகேசரியில் எழுதி வரும் என். இராமச்சந்திரா பிரசுரமான சில கட்டுரைகளை தெரிவு செய்து நூல் வடிவமாக்கியுள்ளார். இவரது முயற்சி வெகுவாகப் பாராட்டப்படவேண்டியதாகும். காலம் பொன்னானது என்பதை கருத்தில் கொண்டு தனது சுய முயற்சியில் எழுதிய கட்டுரைகளை "ஒரு கிராமத்தின் கண்ணீர் கதை" என்ற பெயரில் இந்தச் சிறு நூலை இன்றைய குடாநாட்டின் சூழ்நிலையிலும் பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியிலும் துணிந்து வெளியிட்டுள்ளார்.

இன்று அவரது ஆக்கங்கள் நூல் வடிவம் பெற்று கலைந்து போகும் நினைவுகளை மீட்டுப்பார்க்கின்றன. அவரது அயராத முயற்சிகளையும் சேவைகளையும் பாராட்டுவதில் நான் பெருமையடைகின்றேன்.

ஆர். பிரபாகரன்

18.02.2009 பிரதம ஆசிரியர், "வீரகேசரி."

வாழ்த்துரை

ஊடகவியலாளர் திரு. என். இராமச்சந்திரா (ஜே.பி) பத்திரிகைத் துறையில் நீண்ட கால அனுபவ திரட்சியுடையவர். ஈழநாடு பத்திரிகையில் செய்திப் பணியை ஆரம்பித்த இவர் வீரகேசரியில் பிரதேச செய்தியாளராக இணைந்து கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாகக் கடமையாற்றி சிறந்த பத்திரிகையாளர் என்ற மதிப்பைப் பாராட்டையும் பெற்றவர்.

சமூக சிந்தனை கொண்ட இவரின் செய்திகள் காத்திரமானவை. மக்களின் பிரச்சினைகளை பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்துவதிலும் அதற்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதிலும் அவரின் வகிபங்கு பாராட்டுக்குரியது. "செய்தி" என்பதற்கப்பால் செய்திக் கட்டுரைகள், நேர்காணல்கள், சிறுகதை, கவிதைகள் எனப் பன்முகப் படைப்பாளுமை கொண்டவராகத் திகழும் திரு. இராமச்சந்திரா தனது செய்திக் கட்டுரைகளை "ஒரு கிராமத்தின் கண்ணீர்க்கதை" என்ற பெயரில் தொகுத்து நூல் வடிவில் வெளியிடுவது பாராட்டுக்குரியது.

அவரின் இந்த முயற்சி இதழியல் துறையைக் கற்கும் மாணவர்களுக்கும், செய்தி அனுபவங்களை மீட்க விரும்பும் ஆர்வலர்களுக்கும் அரிய கிடைப்பனவாகும்.

அவரின் இம்முயற்சி வெற்றியளிக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

24.04.2009

மக்கள் பத்திரிகையாளர்
திரு. நாகராஜா இராமச்சந்திரா (கே.பி)

இலங்கையின் பத்திரிகைத்துறை வரலாற்றிலும் யாழ்ப்பாணப் பத்திரிகையாளர்களில் 40 வருட காலம் சேவையாற்றிய ஜாம்பவானாகவும் உயர்ந்த வாண்மையுள்ள வீரகேசரி தேசிய நாளிதழின் செய்தியாளராகச் சேவையாற்றிவரும் பெருமனிதர் உயர்திரு.நாகராஜா இராமச்சந்திரா அவர்களின் "ஒரு கிராமத்தின் கண்ணீர்கதை" என்ற நூலுக்கு முன்னுரை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

வேலணைப் பிரதேசசபை அண்மையில் நடாத்திய உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் பத்திரிகையாளர் என். இராமச்சந்திராவுக்கு "கலைச்சுடர்" பட்டம் வழங்கிக் கௌரவிக்கின்றார்.

ஒரு பத்திரிகையாளன் பன்முக ஆளுமையும் மனித தத்துவ மாண்பும், தொடர்பாடல் தேர்ச்சியும் உள்ளவராக மிளிர வேண்டும். இதற்கு முன்னுதாரணமாக இன்று எம்மிடையே வாழ்ந்து காட்டி வருபவர் திரு. என். இராமச்சந்திரா அவர்கள். எமது யாழ்ப்பாண மண்ணில் கடந்த நாற்பது வருடங்களாக நடந்த நிகழ்வுகளையும் சோகங்களையும் வரலாறுகளையும் மெய்ப்பட எழுதி வீரகேசரி நாளிதழில் வெளியிட்டு வரும் இந்நூலாசிரியர் எம் மண்ணிற்குக் கிடைத்த மாபெரும் பொக்கிசம் அருமருந்தாகும். வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்க உபதலைவராக இருந்து பத்திரிகை யாளர்களின் உரிமைக்காகப் பாடுபட்டவர் இவர்.

கலைச்சுடர் என். இராமச்சந்திரா மேற்படி விழாவில் பதிலுரை நிகழ்த்துகின்றார்.

எம் யாழ். மண்ணில் மிக மூத்த பழம்பெரும் பத்திரிகையாளராக வாழ்ந்து வரும் நூலாசிரியர் பலமான வீரகேசரி பத்திரிகையை மக்கள் ஊடகமாகப் பயன்படுத்தினார். அன்றாடம் காணும் மக்களின் பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கும்

சிக்கல்களை வீரகேசரியில் வெளியிட்டு பல பிரச்சினைக்குத் தீர்வுகளைக் கண்டுள்ளார்.

அவருடைய இந்நூலில் மண்டைதீவுக்கிராமம் அதனுடைய எழுச்சி, வளர்ச்சி, யுத்த அழிவுகள் தொடர்பான தகவல்களுடன் தீவக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கல்விப்பின்னடைவுகளுக்கான காரணங்கள், வைத்தியசாலைகளில் சுகாதார அபிவிருத்திகளின் தேவைகள் என்பவற்றை வீரகேசரி பத்திரிகை ஊடாக வெளிக்காட்டி பல விடயங்களுக்குத் தீர்வுகளும் கண்டுள்ளார். இவர் மக்கள் சேவையின் முன்மாதிரியாக இருப்பதுடன் ஓர் ஊடகவியலாளரால் பலவற்றைச் சாதிக்க முடியும் என்பதைத் தன் வாழ்நாளில் சாதித்த ஒரு சிறந்த அமைதியான ஆற்றல் உள்ள பண்பட்ட மக்கள் பத்திரிகையாளராகத் திகழ்ந்துள்ளார். அதற்கான பல செய்திகள் இந்நூலில் உள்ளன.

யாழ். தொழினுட்பக் கல்லூரியில் இடம்பெற்ற குடாநாட்டுப் பத்திரிகையாளருக்கான இருநாள் கருத்தரங்கில் பத்திரிகையாளர் என். இராமச்சந்திரா தனது பத்திரிகைத்துறை அனுபவங்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். அருகில் கல்லூரி அதிபர் நா. யோகராஜன் அவர்கள் அமர்ந்திருப்பதைக் படத்தில் காணலாம்.

மேலும் ஒரு வரலாற்றுக்காலமான மூன்று தசாப்தங்களுக்கு மேல் யாழ்ப்பாண மண்ணின் மக்களின் சமூக வாழ்க்கையை, நிலமைகளை, பிரச்சினைகளை, வேதனைகளை, சாதனைகளை வெளி உலகிற்கு வீரகேசரிச் செய்திகள், கட்டுரைகள், விபரணங்கள் மற்றும் இலக்கிய ஆக்கங்கள், கவிதைகள் என்பவற்றினூடாக எடுத்துக்காட்டி இருக்கின்றார். பல விருதுகளையும் பரிசுகளையும் பல பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். அத்துடன் பல பொது ஸ்தாபனங்களிலும் முக்கிய உறுப்பினராகப் பதவிகளையும் வகித்துள்ளார்.

மேலும் ஈழநாடு, உதயன் பத்திரிகைச் செய்தியாளர், மண்டைதீவு பிரஜைகள் குழுச்செயலாளர், மண்டைதீவு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மற்றும் யாழ்.வர்த்தக ஊழியர் சங்கத் தலைவர் சமாதான நீதிவான் பல இந்து ஆலயங்களில் அரும்பணியாற்றி வருபவர். யாழ். வர்த்தக ஊழியர்களின் உரிமைகளை வென்றெடுத்தவர் "ஊழியன்" என்ற மாதாந்தப் பத்திரிகையை ஆரம்பித்து அதன் இதழாசிரியராக சேவையாற்றி வந்தவர்.

யாழ்ப்பாண மண்ணில் ஆற்றிய சேவையைப் போல கிளிநொச்சி மண்ணிலும் பல சமூக சமய பத்திரிகைச் சேவைகளை அர்ப்பணிப்புடன் இந்நூலாசிரியர் ஆற்றியுள்ளார். கிளிநொச்சி இலக்கிய வட்டத்தை உருவாக்கிய பிதாமகனும் இவரே. அதன் செயலாளராக இருந்து மிக இக்கட்டான யுத்த காலத்தில் பாடசாலை மாணவர்களின் கல்வி மற்றும் பெரியோர்களின் இலக்கிய ஆர்வங்களை மேலும் தூண்டும் வகையில் பல செயலமர்வுகளையும் நூல் வெளியீடுகளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடாத்தி பெரும் சேவையைச் செய்துள்ளார்.

மற்றும் பிரதேச தேசிய சர்வதேச ரீதியான ஊடகவியலாளர் களுக்கான செயலமர்வுகள் பயிற்சிகள், சுற்றுலாக்களில் கலந்து கொண்டு தனது திறமைகளை வெளிக்காட்டியுள்ளார். எமது தமிழ் மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்து பல தீர்க்கதரிசனமான செய்திகளை வீரகேசரி பத்திரிகை ஊடாகப் பணியாற்றிய உயர் சேவையாளர் திரு.என்.இராமச்சந்திரா போற்றப்பட வேண்டியவர். அவருடைய மக்கள் சேவை மதிக்கப்பட வேண்டியது. தற்போது அறுபது வயதை அடையவுள்ள மணிவிழா நாயகன் இந்நூலுடன் மேலும் பல நூல்களையும் ஆக்கங்களையும் வெளியிடவேண்டும். இதற்கு எம் மக்களின் பூரண ஒத்துழைப்பு அவருக்குக் கிடைக்கும். தொடர்ந்து அவர்களது சேவை எம் மண்ணிற்குக் கிடைக்கவேண்டும். அவர் நீண்ட காலம் நல்வாழ்வு வாழ இறையருளை வேண்டுகின்றேன்.

பா.தனபாலன்
02.01.2009 உபபீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

வீரைவில் வெளிவரவுள்ள நூல்கள்

1) பேசும் உள்ளங்கள்
(பேட்டிக் கட்டுரைத்தொகுதி)
2) நெஞ்சில் நிறைந்த நீங்காத நினைவுகள்
(நினைவஞ்சலிக்கட்டுரைத்தொகுதி)
3) வாழ்வின் தரிசனங்கள்
(கட்டுரைத்தொகுதி)

என்னுரை

வீரகேசரி பத்திரிகையின் வேலணை நிருபராக கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பணியாற்றி வருவதோடு அப்பத்திரிகையில் அவ்வப்போது பிரசுரமான எனது ஆக்கங்களை நூல் வடிவில் வெளியிட விரும்பி எனது வீட்டு நூலகத்தில் பாதுகாப்பாகச் சேகரித்து வைத்திருந்தேன்.

1990ஆம் ஆண்டு மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது எனது வீட்டில் உள்ள பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டும், எரிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் காணப்பட்டது. அத்துடன் நான் தேடிச் சேகரித்து வைத்த பெரும் அறிஞர்களின் நூல்கள் அவ்வப்போது வீரகேசரியில் பிரசுரமான கட்டுரைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகக் காணப்பட்டது. வீட்டில் உள்ள பெறுமதிமிக்க பொருட்கள் அழிந்து போனது குறித்து நான் கவலைப்படவில்லை. பத்திரிகையில் பிரசுரமான எனது ஆக்கங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாக காணப்பட்டதை நினைக்கும் போதும் இன்றும் தீராத கவலையை எனக்குத் தந்து கொண்டிருக்கின்றது.

1990ஆம் ஆண்டுக்குப் பின்பு வீரகேசரி நாளிதழிலும் வார மலரிலும் பிரசுரமான சில கட்டுரைகளையும், ஒரு கவிதையையும் தொகுத்து "ஒரு கிராமத்தின் கண்ணீர்க் கதை" என்ற பெயரில் இந்த சிறு நூலை இன்றைய சூழ்நிலையிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் வெளியிட்டுள்ளேன்.

நான் எழுதுவதை ஒரு சமூகப் பணியாகவே அன்று தொட்டு இன்று வரை மேற்கொண்டு வருகின்றேன். மக்களின் தேவைகளை அவலங்களை, பிரச்சினைகளை, அநீதிகளை எனது செய்திச் சேவை

மூலம் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து வெற்றியும் கண்டுள்ளேன். எனது செய்திகளில் அநேக சம்பவங்களுக்கு தீர்வு காணப்பட்டு பலனும் கிடைத்துள்ளது.

பத்திரிகைத்துறை ஏனைய துறைகளிலும் பார்க்க சிக்கல் நிறைந்தது என்ற உண்மையை பத்திரிகையாளார்கள் எவரும் ஒத்துக் கொள்வார்கள். பத்திரிகைத்துறையில் 40 ஆண்டுகளாக மிகவும் நேர்மையாகவும், உண்மையாகவும், பக்க சார்பின்றியும், நடு நிலமையாகவும் கடமையாற்றி வருகின்றேன். இதனால் பத்திரிகைத் துறையில் நீண்டகாலம் என்னால் நிலைத்து நிற்க முடிந்தது.

ஆரம்பத்தில் ஈழநாடு, உதயன் தற்போது வீரகேசரியில் 30 வருடங்களுக்கு மேலாக வேலணைப்பகுதி நிருபராகப் பணியாற்றி வருகின்றேன்.

இந்த நூல் சிறக்க வாழ்த்துரை வழங்கிய வீரகேசரி பிரதம ஆசிரியர் ஆர்.பிரபாகரன், வீரகேசரி வாரமலர் ஆசிரியர் டி.தேவராஜ், செய்தி ஆசிரியர் ஸ்ரீகஜன், உதவி ஆசிரியர்கள் எஸ்.அற்புதானந்தன், க.சிவராஜா முன்னாள் வீரகேசரி பிரதம ஆசிரியர் தமிழ்மணி க.நடராசா ஆகியோர்களுக்கும் முன்னுரை வழங்கிய எனது இனிய நண்பரும் யாழ்.கல்வியியற்கல்லூரி உபபீடாதிபதி பா.தனபாலன் அவர்களுக்கும், (அட்டையில் பின்பக்கம்) அறிமுகவுரை வழங்கிய எனது ஆலோசகரும் நண்பருமான நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தமிழறிஞர் கே.வி.குணசேகரம் அவர்களுக்கும் இந்த நூலை ஒப்பு நோக்கி உதவிய சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் அவர்களுக்கும், அழகாக அச்சிட்டுத் தந்த பிள்ளையார் அச்சகத்தாருக்கும் ஊழியர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலைச்சுடர் என். இராமச்சந்திரா ஜே.பி.

ஒரு கிராமத்தின் கண்ணீர் கதை

வடபகுதியிலுள்ள சப்த தீவுகளில் தலைத்தீவாக விளங்குவது மண்டைதீவு கிராமம் ஆகும். இங்குள்ள சகல தீவுகளுக்கும் தலைத்தீவாக இது விளங்குவதால் இதை மண்டைதீவு என அழைப்பதாகக் கூறப்படுகிறது.

யாழ். நகரில் இருந்து 6 1/2 மைல் தூரத்தில் உள்ள இத்தீவு வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசமாக இருந்து வருகின்றது.

கடந்த 1990ஆம் ஆண்டுக்கு முன்பு இத்தீவில் 1000க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இங்கு மீனவர்களும் விவசாயிகளும் ஒற்றுமையாக மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார்கள்.

1990ஆம் ஆண்டு தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவு கிராமம் பெரிதும் பாதிப்புக் குள்ளாகியது. இங்குள்ள மக்களின் சொத்துக்கள் அழிக்கப் பட்டுள்ளன. இராணுவத்தினரின் நடவடிக்கைகளின் போது பலர் இறந்துள்ளனர்.

விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட பல இளைஞர்கள் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. இவர்களின் நிலை இன்றுவரை கேள்விக்குறியாகவே உள்ளது? மண்டைதீவுக்கு ஏற்பட்ட உயிர்ச்சேதம் உடமை அழிவுகள் போல் வேறு எந்த தீவு மக்களுக்கும் ஏற்படவில்லை.

1990ஆம் ஆண்டு ஆவணி மாதம் 23ஆம் திகதி மண்டைதீவு வரலாற்றிலேயே என்றும் மறக்கமுடியாத கரிநாளாகும். அன்றுதான் மாலை 6.00 மணிக்கு இராணுவத்தினர் மண்டைதீவைச் சுற்றி வளைத்த நாளாகும்.

இராணுவ நடவடிக்கைகளின் போது இராணுவத்தினரின் பீரங்கிகளும் வானத்தில் 5க்கும் மேற்பட்ட ஹெலிகளும் பறந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் இருந்தன. இதனால் இங்குள்ள மக்கள் பயத்தினால் பதுங்குக் குழிகளுக்குள் தொடர்ந்து மூன்று நாட்களை கழித்தார்கள். மூன்றாவது நாள் மாலை மண்டைதீவு சித்திவிநாயகர் ஆலயத்தில் தஞ்சமடைந்தனர்.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்களும் பாதுகாப்பு கருதி இங்கு வந்து மேற்படி ஆலயத்துக்குள் தஞ்சமடைந்தனர்.

மொத்தமாக இவ்வாலயத்துக்குள் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தஞ்சமடைந்து இருந்தனர். இவர்கள் தொடர்ந்து இரு நாட்கள் இருந்த பின்பு இராணுவத்தினர் இங்குள்ள மக்களை அல்லைப்பிட்டி பரவக்கடல் ஊடாக மண்கும்பான் என்னும் இடத்துக்கு செல்லுமாறு உத்தரவு பிறப்பித்தனர்.

இங்குள்ள மக்கள் தங்கள் கையில் எடுத்துச் செல்லக் கூடிய பொருட்களை மட்டும் எடுத்துக்கொண்டு மண்கும்பான் சென்று அங்குள்ள அரசினர் பாடசாலைகளிலும் சாட்டி பள்ளிவாசல்களிலும் தஞ்சம் புகுந்தனர்.

தற்பொழுது மண்டைதீவு பகுதியில் குறிப்பிட்ட சிறு தொகையினரே வசித்து வருகின்றார்கள்.

இவர்கள் அடிப்படை வசதிகள் இன்றி கஷ்டப்படுகிறார்கள். அனேகமான மக்கள் இடம்பெயர்ந்து வன்னியிலும் நலன்புரி நிலையங்களிலும் யாழ். குடாநாட்டில் உள்ள உறவினர்கள் வீடுகளிலும் பலவித கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது மண்டைதீவு கடற்படையினரின் பூரண கட்டுப் பாட்டுக்குள் உள்ளது. இங்கு மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் கடற்படையினர் சென்றி அமைத்து பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். மக்கள் வாழ்ந்த அனேக வீடுகள் அங்கு முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

இயற்கையாக பனைவளம் கொண்ட இத்தீவு தற்போது பனைகள் எல்லாம் அழிக்கப்பட்டு பாலைவனம்போல் காட்சியளிக் கின்றது. தற்போது அங்கு வாழ்ந்து வரும் மக்களை தவிர வேறு எவரும் மண்டைதீவுக்குள் உட்புகமுடியாது. அப்படிப் போகவேண்டு மானால் பாஸ் எடுத்தே செல்லவேண்டும். இடம்பெயர்ந்த மண்டைதீவு மக்களுக்கும் இதே நிலைதான்.

இயற்கை அழகு நிறைந்துள்ள இத்தீவு இன்று சுடுகாடாக விதவைக்கோலத்தில் காணப்படுகின்றது. இடம்பெயர்ந்த அனேக குடும்பங்கள் மீண்டும் தங்கள் சொந்த கிராமத்திற்கு சென்று வாழ முடியாத நிலை. அவர்களது வீடுகள் எல்லாம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டன. இதோடு அங்கு மக்கள் குடியிருப்பு பகுதிகளில் கடற்படை முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அங்கு சென்று வாழ மீண்டும் அஞ்சுகின்றார்கள்.

அங்குள்ள அரசினர் பொது வைத்தியசாலை பலத்த சேதத்திற்குள்ளாகி செயல் இழந்து காணப்படுகிறது. இதனால் அங்கு

தற்போது வசிக்கும் மக்கள் தங்கள் வைத்திய தேவைக்கு 6 1/2 மைல் நடந்தே யாழ்.நகர் செல்லவேண்டும். தற்போது அரசும் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் போர் நிறுத்தம் செய்த பின்பாவது கடற்படையினர் மண்டைதீவு கிராமத்தை விட்டு வெளியேறுவார்களா? அவர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டால் மக்கள் அச்சமின்றி மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு சென்று வீடுகளை அமைத்து இயல்பு வாழ்க்கையை ஆரம்பிப்பார்கள்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள் அரச சார்பற்ற நிறுவனங்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் தலையிட்டு மண்டைதீவு மக்கள் மீண்டும் தங்கள் சொந்த மண்ணில் வாழ வழிவகுத்துக் கொடுப்பார்களா?

ஒரு பத்திரிகையாளனின் பார்வையில் யாழ். நகர் முதல் முகமாலை வரை

யாழ். செயலக புனர்வாழ்வு பகுதி பொறியியலாளர் கிரிதரன் எமது கொழும்பு தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் இருவர் உட்பட நானும் பொறியியலாளரின் ஊழியர்கள் மூவருமாக மொத்தம் 7 பேர் கடந்த 1ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு கிரிதரனின் வீட்டிலிருந்து அவரது காஸ் வானில் முகமாலையை நோக்கி பிரயாணத்தை ஆரம்பித்தோம். வானை கிரிதரனே செலுத்தி வந்தார்.

எமது வாகனம் செம்மணியை அடைந்ததும் மாணவி கிருசாந்தி அவரது தாயார், சகோதரன் மற்றும் அயலவர் கடந்த 1996ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட இடத்தை கொழும்பு பத்திரிகையாளர்களுக்குக் காண்பிக்கின்றேன்.

பின்னர் எமது வாகனம் நாவற்குழி பாலம் ஊடாக கைதடியை நோக்கி செல்லும் போது இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கி வந்த முதியோர் இல்லம், அரசினர் சித்த வைத்தியசாலை ஆகியன மீண்டும் பழைய இடத்தில் இயங்குவதை கண்டோம். கைதடிப் பகுதியில் சில வர்த்தக நிலையங்கள் புனரமைக்கப்பட்டு மீண்டும் திறந்திருப்பதையும் நாங்கள் அவதானித்தோம்.

சாவகச்சேரி சென்றடைந்த நாம் சாவகச்சேரி பஸ்நிலையம், பொதுச்சந்தை கட்டடங்கள், நீதிமன்ற கட்டடங்கள் உட்பட அனைத்து கட்டடங்களும் போரின் அனர்த்தங்களால் உருக்குலைந்து இருப்பதைக் கண்டோம். குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலால் வீதிகளில் பாரிய பள்ளங்கள் ஏற்பட்டிருப்பதையும் கண்டோம்.

சாவகச்சேரி அரசினர் பொது வைத்தியசாலைக்கு கிரிதரன் எம்மை அழைத்துச் சென்றார். சாவகச்சேரி அரசினர் பொது வைத்தியசாலை கட்டடங்கள் உருக்குலைந்து காணப்பட்டன. அவை தற்போது புனரமைக்கப்பட்டு வருவதை நாம் கண்டோம். பொதுவாக வைத்தியசாலை வாட்டுக்கள் புனரமைக்கப்பட்டு வர்ணம் பூசும் வேலைகள் இடம் பெறுவதைக் காணமுடிந்தது.

சாவகச்சேரியில் கண்டி வீதி ஊடாக சங்கத்தானையில் உள்ள சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம் ஆகியன மீண்டும் இயங்குவதைக் காண முடிந்தது. சாவகச்சேரி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வர்த்தகர்கள் சிலர் மீண்டும் சாவகச்சேரிக்குத் திரும்பி தங்கள் வர்த்தக நிலையங்களை புனரமைத்து திறந்து இருப்பதை கண்டோம். வழமையான ஜனசந்தடியுள்ள பிரதேசமாக காணப்படும் சாவகச்சேரி நகரம் இன்று

சுடுகாடு போல் காட்சி அளிக்கின்றது. யாழ். குடா நாட்டில் பிரசித்தி பெற்ற பொதுச்சந்தைகளில் சாவகச்சேரி பொதுச் சந்தையும் ஒன்றாகும்.

வாரத்தில் இரு நாட்கள் (புதன், சனி) சந்தை நாட்களாக கருதப்படும். இந்த நாட்களில் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பெரும் தொகை வர்த்தகர்களும் பொது மக்களும் பெரும் திரளாக இங்கு வருவதுண்டு. ஆனால் இன்று குறிப்பிட்ட ஒரு சில மனிதர்களின் நடமாட்டத்தை மட்டும் அங்கு காணக் கூடியதாகவுள்ளது. எமது வாகனம் கொடிகாமம் நோக்கி சென்றது. அங்குள்ள கடைகள் அனைத்தும் திறந்து இருந்தன. பொதுச்சந்தையும் இயங்குகின்றது. கொடிகாமம் பஸ் நிலையப் பகுதியில் பெரும் தொகையான மக்கள் ஒன்று கூடியிருப்பதைக் காண முடிந்தது. குறிப்பாகக் கொடிகாமம் வழமைபோல் இயங்குகின்றது என்று கூறலாம்.

மிருசுவிலை நோக்கி எமது வாகனம் சென்று கொண்டிருக்கும் போது இராணுவத்தினர் எங்களை மறித்து விசாரணை செய்தார்கள். பொறியியலாளர் கிரிதரன் எங்களை பத்திரிகையாளர்கள் என்று அவர்களுக்கு அறிமுகப்படுத்தவில்லை. தனது கச்சேரி அலுவலக ஊழியர்கள் என தெரியப்படுத்தினர். இராணுவ வீரர் ஒருவர் எமது வாகனத்தின் முன்பக்கத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்.

எமது வாகனம் முகமாலையை அண்மித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது வீதி அபிவிருத்திச் சபையினரால் மேற்படி வீதி புனரமைக்கப்பட்டுக் கொண்டிருப்பதை எம்மால் காணமுடிந்தது. அத்துடன் சில இராணுவ வீரர்கள் கண்ணிவெடி அகற்றும் பணியிலும் ஈடுபட்டு இருந்தனர்.

இதேவேளை வாகனங்கள் புறம்பாக நிறுத்தி வைக்கப்பட்டு சோதனை செய்வதற்காகச் சோதனைச் சாவடிகள் நிர்மாணிக்கப் பட்டிருப்பதையும் பொதுமக்கள் இளைப்பாறும் கொட்டகைகள், சோதனைச் சாவடிகள் பல அமைக்கப்பட்டுக் கொண்டிருப்பதையும் நாம் காணமுடிந்தது.

இப்பணிகளில் 100க்கு மேற்பட்ட தொழிலாளிகள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். எமது வாகனம் முகமாலை ஏ - 9 பாதை அணைக்கட்டு பகுதியை அண்மித்தவுடன் நாம் அனைவரும் காஸ் வானை விட்டு கீழே இறங்கினோம்.

அங்கு கடமையில் உள்ள இராணுவத்தினர் எங்களை நெருங்கி வந்தனர். கிரிதரன் மீண்டும் அதே பொய்யைக் கூறினார். நாங்களும் பத்திரிகையாளர்கள் என்பதை அவர்களுக்கு அடையாளப்படுத்த விரும்பவில்லை. எங்கள் கமராவை மறைத்து வைத்து இருந்தோம். களவாக ஒரு இரு படங்களை சக பத்திரிகையாளர் ஒருவர் மறைந்து படம் எடுத்துக் கொண்டார்.

கிரிதரனின் ஊழியர்கள் இரவு பகலாக கொட்டகைகள் அமைக்கும் பணிகளில் ஈடுபடுவதை அங்கு காண முடிந்தது. சுமார் 5 ஏக்கர் விஸ்தீரணமுள்ள முகமாலை பகுதியில் துப்பரவு செய்யப்பட்டு பிரயாணிகளுக்கு குடி தண்ணீர், மலசலகூடங்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளை நிர்மாணிக்கும் பணிகளில் ஊழியர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

முகமாலை ஏ - 9 பாதை அணைக்கட்டிலிருந்து சிறிது தூரத்தில் விடுதலைப்புலிகளின் சென்றி இருப்பதாகவும் இங்கிருந்து பார்த்தால் அவர்கள் இருப்பது தெரியும் என்றும் எங்களுக்கு அன்று தெரிவிக்கப்பட்டது.

பல்வேறு அடிப்படைப் பிரச்சினையுடன் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலை

யாழ்.குடாநாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் யாழ்.மாவட்ட அரசினர் போதனா வைத்தியசாலைகளில் உள்ள பழமை வாய்ந்த கட்டிடங்கள் எல்லாம் ஷெல், விமானத்தாக்குதல் ஆகியவற்றின் அதிர்வுகளால் நிலை குலைந்து பழுதடைந்துள்ளன. இவைகளை மீண்டும் முற்றாக அகற்றி மீண்டும் புதிதாக நவீன வசதிகளுடன் நிர்மாணிக்கவேண்டும்.

மேலும் பல புதிய கட்டடங்கள் புதிதாக நிர்மாணிப்பதற்கு வைத்தியசாலை நிலப்பரப்பு காணாத நிலையில் உள்ளது. ஆகவே யாழ்.குடாநாட்டில் உள்ள அரச தரிசு நிலங்களை அரசாங்கம் பொறுப்பேற்று ஒவ்வொரு நோய்களுக்கும் தனித்தனியாக வைத்திய சாலைகளை நிர்மாணித்தால் தற்போது யாழ். மாவட்ட அரசினர் போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி, வசதியீனங்களை தவிர்த்துக்கொள்ளலாம்.

தற்போது ஒரே இடத்தில் சகல நோய்களுக்கும் உரிய இவ் வைத்தியசாலை கட்டடப் பற்றாக்குறை இடநெருக்கடி, தளபாட பற்றாக்குறை போன்ற பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தற்போது யாழ் போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து காணப்படுகின்றது. இவற்றில் 75% வாட்டுகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் ஆவார்கள். இதனால் கட்டிட பற்றாக்குறை காரணமாக இடவசதியின்மை ஏற்படுகின்றது. அத்துடன் தளபாட பற்றாக்குறையும் நிலவி வருகின்றது.

நோயாளர்களின் வருகை பெருகி வருவதால், அவர்கள் அனைவருக்கும் கட்டில் வசதி அற்ற நிலையில் சில வாட்டுக்களில் நோயாளர்கள் தரையில் படுக்கவேண்டிய அவல நிலையை காணக் கூடியதாகவுள்ளது. அத்துடன் சுகாதாரச் சீர்கேடும் ஏற்படுகின்றது. கட்டில் போன்ற தளபாட தட்டுப்பாடு அரசுக்கு பல முறை சுட்டிக்காட்டப்பட்டும் இன்னும் நிவர்த்தி செய்யப்படவில்லை என நோயாளர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 1983ஆம் ஆண்டுக்கு பின்பு யுத்த சூழ்நிலை கருதியாழ். மாவட்ட அரசினர் போதனா வைத்தியசாலையின் தேவைகளில் அரசாங்கம் அதிக அக்கறை காட்டுவதாக இல்லை. இங்கு ஆளணிகள், உபகரணங்கள், தளபாடங்கள், சிற்றூழியர்கள், சுகாதார தொழிலாளர்கள், டாக்டர்கள், வைத்திய நிபுணர்கள் உட்பட பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதிலும் இங்குள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதிலும் அரசாங்கம் பின்னடித்துக் கொண்டே இருக்கின்றது என மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இதனால் ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளுக்குள்ள வசதிகளில் அரைவாசிகூட மேற்படி வைத்தியசாலைக்கு இல்லை. இவ்வைத்தியசாலையில் விசேட வைத்திய நிபுணர்கள் 32 பேர்கள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் தற்போது 17 பேர்கள் கடமையாற்றி வருகிறார்கள்.

X கதிர் கருவி இயக்குநர்கள் 20 பேர் கடமையாற்ற வேண்டிய இடத்தில் தற்போது 08 பேர்களே கடமையாற்றி வருகின்றார்கள்.

பரிசோதனை ஆய்வாளர்கள் 20 பேர் தேவை. ஆனால் தற்போது 10 பேர் மட்டும் கடமையாற்றி வருகின்றார்கள். இதைவிட

நரம்பியல் சிகிச்சை பிரிவு இங்கு இல்லை. அதற்கான சத்திரசிகிச்சை நிபுணர்களும் இங்கு இல்லை. அதோடு சம்பந்தப்பட்ட உபகரணங்களும் இல்லை. மார்பு நோய், சிறுநீரகக் கோளாறு போன்ற நோய்களுக்குரிய வைத்திய நிபுணர்கள் இங்கு இல்லை. இதனால் மேற்படி நோய்களால் பாதிக்கப்பட்ட கடும் நோயாளிகளை கொழும்பு, அனுராதபுரம் போன்ற மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பவேண்டிய நிலைக்கு வைத்தியசாலை நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது. இதனால் நோயாளர்களும் அவர்களது குடும்பத்தினர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அரசு கொழும்பு, அனுராதபுரம் போன்ற மாவட்ட அரச பொது வைத்தியசாலைகளைப் போல யாழ். மாவட்ட அரசினர் போதனா வைத்தியசாலையையும் தரம் உயர்த்தி வைத்திய சாலையில் நிலவி வரும் தட்டுப்பாடுகளை நிவர்த்தி செய்து சகல தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். வருங் காலத்தில் அப்படி செய்வதனால் இங்கு இருந்து நோயாளர்களை கொழும்பு, அனுராதபுரம் போன்ற மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கத்தேவையில்லை.

வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை தினசரி பல மடங்காக பெருகிக் கொண்டே போகின்றன. இதனால் சுகாதார தொழிலாளிகள் சிற்றூழியர்கள் மருத்துவ மாதுகள் உட்பட சகல உத்தியோகத்தர்களுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

தினசரி நோயாளர்களை பார்க்க வருவோரின் வரவும் அதிகரித்துள்ளது. இதனால் வைத்தியசாலை நோயாளிகள் சிகிச்சை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு டாக்டர்கள், தாதிகள், சிற்றூழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். தற்போது நாட்டின் சூழ்நிலை கருதி நோயாளிகளை குடும்பத்தினர்

மற்றும் உறவினர்கள் பார்வையிடும் நேரம் அதிகரித்துள்ளது. பி.ப. 12மணியில் இருந்து 2 மணி வரையும் மாலை 4½ இருந்து இரவு 7 மணி வரையும் காலை 6 மணியில் இருந்து 7 மணி வரையும் நோயாளர்களைப் பார்வையிடலாம்.

நோயாளர்களை பார்வையிட வருவோர் தினசரி அதிகரித்து காண்பதால் வைத்தியசாலை சுற்றாடல் சூழல் சுகாதார சீர்கேடால் பாதிக்கப்படுகின்றது. ஆகவே நோயாளிகள், அவர்களைப் பார்வையிட வருபவர்கள் சுகாதாரத்தினைப் பேணுவதில் அதிக அக்கறையும் ஆர்வமும் காட்டவேண்டும்.

வைத்தியசாலையில் உள்ள அனைத்து மலசல கூடங்களை முறையே ஒழுங்காகவும் சுத்தமாகவும் பாவிக்க வேண்டும். நோயாளிகளும் பார்வையாளர்களும் இங்குள்ள மலசல கூடங்களை முறையாக துப்பரவாக பாவிக்காத காரணத்தால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளன.

இல்லையேல் அதிலிருந்து வீசும் துர்நாற்றத்தால் அனைத்து பொது மக்களும் பெரும் சிரமப்படவேண்டிவரும். இது விடயத்தில் இதற்குரிய உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தற்போது யாழ். மாவட்ட அரசினர் போதனா வைத்திய சாலையாக இருப்பதால் இங்கு தினசரி வைத்திய மாணவர்கள், பயிற்சி பெறுவதோடு கல்வி கற்று வருகின்றார்கள். ஆனால் மருத்துவ மாணவர்கள் இங்கு கல்வி கற்று பயிற்சி பெற்று பரீட்சையில் சித்தி பெற்று டாக்டர் ஆக பட்டம் பெற்ற அனேக டாக்டர்கள் தங்கள் சுயநலம் கருதி வெளிநாடு செல்கிறார்கள். இதனால் தான் இங்கு டாக்டர்களுக்கும் வைத்திய நிபுணர்களுக்கும் தட்டுப்பாடு

நிலவுகின்றது. ஆகவே அரசு இதற்கு தடை விதித்து வைத்திய நிபுணர்களை வெளியில் செல்ல தடை விதிக்கவேண்டும்.

வைத்தியசாலை சிற்றூழியர்கள் சிலர் தாதிகள், வாட்டுகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் மீது கோபப்பட்டு பேசுவதாகவும் கூறப்படுகின்றது. ஆகவே நோயாளர்களின் நிலையை உணர்ந்து எதிர்காலத்தில் வைத்தியசாலை ஊழியர்கள் இப்படிச் செய்யாது இருப்பது நன்று.

கடந்த 1989ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினர் இங்கு நிலைகொண்டு இருந்த காலப்பகுதியில் யாழ். மாவட்ட அரசினர் போதனா வைத்தியசாலையில் மேற்கொண்ட காட்டுமிராண்டித் தனத்தால் டாக்டர், தாதி உட்பட சிற்றூழியர்கள் 21 பேர் கொல்லப்பட்ட சம்பவம் இவ் வைத்தியசாலை வரலாற்றில் கறை படிந்த துயரச்சம்பவமாகும்.

யாழ். மாவட்ட அரசினர் போதனா வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கத்தினரால் நடத்தப்பட்டு வந்த நோயாளர் பராமரிப்பு சேவையை கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு யாழ். மாவட்ட சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினர் பொறுப்பேற்று தற்பொழுது திறம்பட நடத்தி வருகின்றார்கள்.

மேற்படி சேவையில் தற்பொழுது பெண்கள் உட்பட 30 பேர்கள் பணியாற்றி வருகின்றார்கள். இவர்களுக்கு இரவு - பகல் கொடுப்பனவு ஆக 250 ரூபா மேற்படி படைப்பிரிவினரால் வழங்கப்பட்டு வருகின்றது.

நோயாளர்களை பராமரிப்பதற்கு உறவினர்களுக்கு வசதி இல்லாதவர்கள் இந்த அம்புலன்ஸ் படைப்பிரிவுடன் தொடர்பு

கொண்டு நோயாளர்களை பராமரிப்பதற்கு ஆட்களை பெற்றுக்கொள்ளலாம். இதன் அலுவலகம் மேற்படி வைத்தியசாலை கட்டிடத்தில் இயங்கி வருகின்றது. நோயாளர்களை பராமரிக்கும் சேவையாளர்களுக்கு மஞ்சள் நிறத்திலான மேலங்கி சீருடையாக வழங்கப்பட்டுள்ளது.

மண்டைதீவுப் பகுதிக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை

மண்டைதீவு பகுதியில் நீண்ட நாட்களாக நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக யாழ். நகரில் இருந்து 6½ கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மண்டைதீவுப் பகுதிக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். நகரில் இயங்கிக்கொண்டு இருக்கும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களின் அதிகாரிகளிடம் மண்டைதீவு மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

வேலணை பிரதேச சபையின் டிராக்டர் வண்டி மூலம் இப்பகுதிக்கு குடிநீர் வழங்கப்பட்டு வந்தாலும் அவை இப்பகுதி மக்களுக்கு திருப்தியாக இல்லை என இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். தினசரி காலை, மாலை என இரு தடவை குழாய் மூலம் குடிநீர் வழங்கி உதவினால் இப்பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்துவிடும்.

யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியுள்ள மக்கள் பலர், மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு விருப்பம் காட்டுவார்கள் என்று இப்பிரதேச வாசி ஒருவர் கேசரிக்குத் தெரிவித்தார்.

கரையோரப் பகுதிகளில் வசித்து வரும் மக்கள் இக்குடிநீர்ப் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது இப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடும் வரட்சி காரணமாக இப்பகுதி மக்கள் குடிநீர் தேடி கொள்கலன்களுடன் நீண்ட தூரம் சென்று குடிநீர் பெற்று வருகின்றனர்.

இப்பகுதியில் உள்ள ஒருசில குடிநீர்க் கிணறுகளும் தற்போது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் வற்றிவிட்டன. அத்தோடு, இப்பகுதியில் உள்ள கால்நடைகள் வரட்சியின் கொடுமை தாங்காது நோய் வாய்ப்பட்டு இறந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்த அனர்த்தங்கள் இடம்பெற்ற போது இப்பகுதியில் உள்ள உவர்நீர்த் தடுப்பு அணைக்கட்டுகள் அனைத்தும் உடைந்து தரை மட்டமாகிவிட்டதைத் தொடர்ந்து உவர்நீர் குடிமனைகளில் உள்ள கிணற்று நீருடன் கலந்துள்ளதால் குடிநீர்க்கிணறுகள் எல்லாம் உவர்த்தன்மை அடைந்துள்ளன.

இத்தடுப்பு அணைக்கட்டுகளை மீண்டும் புனரமைத்து உவர்நீர், கிராமப் பகுதிக்குள் உட்செல்வதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இதேவேளை அல்லைப்பிட்டி செட்டிகாட்டு பகுதியிலிருந்து 12 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஊர்காவற்றுறைக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்க முடியுமானால் அல்லைப்பிட்டியிலிருந்து 3½ கிலோ மீற்றர் தூரத்திலுள்ள மண்டைதீவுக்கு ஏன் குழாய் மூலம் குடிநீர் வழங்க முடியாது என்று இப்பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

குடாநாட்டிலிருந்து பயணங்கள் இன்றும் பழைய பல்லவியுடனே

யாழ். குடாநாட்டில் மக்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலைகளும் விஷம் போல் அதிகரித்து விட்டன. இந்த விலையேற்றம் பணக்கார வர்க்கத்தை அதிகம் பாதிக்கா விட்டாலும் அன்றாடம் உழைத்து சீவியம் நடத்தும் ஏழை மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. ஆட்சி மாற்றத்தால் மக்களுக்கு குறிப்பாக தமிழ் இனத்துக்கு விடிவு ஒன்று விரைவில் வந்து விடும் என்று மிகுந்த ஆவலுடன் ஒவ்வொரு தமிழ் மகனும் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றான்.

தினசரி பத்திரிகைகளில் இன்று அடிக்கடி வெளிவரும் செய்திகளின்படி சமாதானம் எம்மை நெருங்கிக்கொண்டு வருவது போல தெரிகின்றது. இதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கின்றது என்பதை நாம் பொறுத்து இருந்து தான் பார்க்கவேண்டும். இதே வேளை யுத்த நிறுத்தம் மோதல் தவிர்ப்பு என்று இருதரப்பினரும் பிரகடனம் செய்து இருப்பதை எமது மக்கள் வரவேற்கின்றார்கள். ஆனால் அது எப்போது நிரந்தரமாக மாறும் என்பது மக்களின் பெருமூச்சாகும்.

யாழ். குடாநாட்டுக்கு வெளியே செல்லவுள்ள மக்கள் பிரயாண அனுமதி பெறுவதற்கு பல விதமான கஷ்டங்களை இன்றும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அவசர தேவையை முன்னிட்டு இராணுவ பாதுகாப்பு அதிகாரிகளின் அனுமதி பெற வேண்டுமானால் அந்த அந்த இடங்களுக்கு பொறுப்பான படைமுகாம் அதிகாரிகளிடம்

விண்ணப்பப்படிவம் பெற்று கிராம அலுவலகர் பிரதேச செயலாளர் சிபார்சுடன் அவசர பிரயாணத்துக்குரிய அத்தாட்சி கடிதம் ஆகியவற்றோடு அடையாள அட்டை இராணுவ அடையாள அட்டை ஆகியவற்றில் மூன்று பிரதிகளை (போட்டோ) பகுதி இராணுவ அதிகாரியிடம் ஒப்படைத்து அவரின் சிபார்சு பெற்று யாழ் சிவில் அதிகாரியிடம் கையளித்த பின்பே பிரயாண அனுமதி கிடைக்கும். அவசர தேவை பிரயாணத்துக்குரிய அத்தாட்சி கடிதம் அனுமதியில்லாதவர் பிரயாண அனுமதிக்கு சுமார் 10 நாட்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த பிரயாண அனுமதி பெறுவதற்காக மக்கள் மணிக்கணக்காக சம்பந்தப்பட்ட இடங்களில் காத்து இருப்பதை காணமுடிந்தது.

இன்று இனப்பிரச்சினை ஒருபுறம் மற்றது மக்களின் அன்றாடப் பிரச்சினை இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஒன்று வருமானால் அன்றாடப் பிரச்சினைக்கே இடமிருக்காது. இதை அரசும் சம்பந்தப்பட்டவர்களும் சிந்தித்துச் செயற்படுவது நன்று. இனப்பிரச்சினையை இழுத்தடிக்காமல் அதை உடன் தீர்த்து போரின் அனர்த்தங்களால் நொந்து போன தமிழ் நெஞ்சங்களின் வயிற்றில் பாலை வார்க்க வேண்டும் அந்த நாள் எப்போ? எப்போ??

அரசு மாறினாலும் யாழ். குடா நாட்டில் கடந்த ஆட்சி காலத்தில் இடம்பெற்ற நடைமுறைகளே தொடர்கின்றன. அதில் எந்த மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் கடுகளவுக்குக் கூட காண முடியவில்லை. இன்று விலையேற்றம் அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, போக்குவரத்து பிரச்சினை என்று அதே பழைய பல்லவிதான்.

ஐ.தே.கட்சி கடந்த தேர்தல் கால பிரசாரத்தில் இனப்பிரச்சினைத் தீர்வு அன்றாட பிரச்சினை வடபகுதிக்கான பிரதான

தரைப்பாதை திறந்து வைப்பது போன்ற பல்வேறு வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்தது. ஐ.தே.கட்சி வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றிப் பல வாரங்கள் சென்று விட்டன. ஆனால் இன்றுவரை பிரதான தரைப்பாதை திறக்கப்படவில்லை. அது திறப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன என்று பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம். ஆகவே இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரசியல்வாதிகள் கூடிய கவனம் எடுத்து உடன் பாதை திறக்கப்படுமானால் மக்கள் கஷ்டங்கள் இன்றி தங்கள் தங்கள் பிரயாணங்களை இலகுவில் மேற்கொள்ள முடியுமே? பாதை திறக்கும் நாளை ஆவலுடன் தமிழ் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். பாதை திறப்பது எப்போ?

தீவுப்பகுதி வைத்தியசாலைகளுக்கு இனியாவது விடிவு ஏற்படுமா?

நயினாதீவு அரசினர் பொது வைத்தியசாலை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக வைத்திய அதிகாரி ஒருவர் இன்றி இயங்காது உள்ளது. இதனால் இப்பகுதி நோயாளர்கள் தங்கள் வைத்திய தேவைகளுக்கு படகு மூலம் கடல் கடந்து குறிகட்டுவான் இறங்கு துறைக்கு வந்து அங்கிருந்து பஸ்வண்டி மூலம் நீண்ட தூரம் பிரயாணம் செய்து யாழ். அரசினர் போதனா வைத்தியசாலைக்குச் செல்கின்றனர். இதனால் பல சிரமங்கள் ஏற்படுவதாகவும் பணமும் வீண் செலவாகின்றது என்றும் இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வைத்தியசாலை இயங்காது இருப்பதால் சிறுவர்கள், முதியவர்கள், கர்ப்பிணிப்பெண்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக இரவு நேரத்தில் கர்ப்பிணிப்பெண்கள்

பிரசவத்திற்காக தொலைவில் உள்ள அரசினர் பொது வைத்திய சாலைகளுக்கு கடல் கடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டு வருகின்றது.

மேற்படி வைத்தியசாலையை தரமுயர்த்தி நவீன வசதிகளுடன் மாற்றியமைத்து நிரந்தர வைத்திய அதிகாரிகள் இருவரை நியமித்து உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதேவேளை யாழ். நகரில் தற்போது இயங்கி வரும் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள் தீவுப்பகுதி அரசினர் பொது வைத்தியசாலை குறைபாடுகளைப் பற்றி நன்கு அறிந்தும் கண்டும் காணாதது போல் இருந்து வருவது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். நகரப்புற வைத்தியசாலைகளில் இவர்கள் காட்டும் அக்கறையை தீவுப்பகுதி வைத்தியசாலைகளில் காட்டுவது இல்லை. யாழ். குடாநாட்டில் மிகவும் பின்தங்கிய பகுதிகளான தீவுப்பகுதி மக்களின் இன்றைய நிலை குறித்தும் அடிப்படை வசதிகள் இன்றி அவர்கள் படும் கஷ்டங்கள் பற்றியும் இன்று எவரும் சிந்திப்பது இல்லை!

அரசாங்க உயர் அதிகாரிகள் அடிக்கடி யாழ்ப்பாணம் வந்து போகும் அரசியல்வாதிகள் போன்றோர் தீவக மக்களின் அபிவிருத்தியிலும் மக்கள் நலனிலும் அக்கறை காட்டுவதில்லை. தீவுப்பகுதிகளில் வாழும் மக்கள் - மக்கள் இல்லையா? அவர்கள் இந்த நாட்டு பிரஜைகள் இல்லையா?

தேர்தல் காலங்களில் மட்டும் இங்கு வந்து முகத்தைக் காட்டும் அரசியல்வாதிகளை தேர்தல் முடிந்தால் கண்களால் கூட

பார்க்க முடியாது. அவர்களது சீவியம் கொழும்பில் உல்லாச வாழ்க்கையாக அமைந்து வருகிறது. எனவே இந்நிலமையை மாற்றி தீவுப்பகுதி அரசினர் பொது வைத்தியசாலைகளின் குறைபாடுகளை யாழ். நகரில் கடமையாற்றும் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் நிவர்த்தி செய்து தீவுப்பகுதி நோயாளர்களின் வைத்திய தேவைக்கு உதவவேண்டும். அது அவரது கடமையும் கூட ஆனால் சுகாதார பணிப்பாளரோ தீவுப்பகுதி அரசினர் பொது வைத்தியசாலைகளின் குறைபாடுகளை சிந்திக்காது இருப்பது மக்கள் மத்தியில் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

சேவை நீடிப்பு பெற்ற ஆர்.எம்.பி.தரத்திலான வயது முதிர்ந்த டாக்டர் சிலரை சேவை நீடிப்புடன் தீவுப்பகுதியில் சில வைத்தியசாலைகளுக்கு கடமைக்காக அனுப்பிவைக்கிறார்கள். அவர்கள் விடுமுறையில் சென்றால் பதில் டாக்டர்கள் அனுப்பி வைப்பது இல்லை. அக்காலங்களில் வைத்தியசாலைகள் இயங்காத நிலையில் நோயாளர்கள் பெருஞ்சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். இதுவே தீவுப்பகுதி அரசினர் வைத்தியசாலைகளின் இன்றைய நிலை! எனவே இந்நிலமையை தவிர்த்து யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்று டாக்டராக வெளியேறும் எம்.பி.பி.எஸ். தரத்திலான டாக்டர்களை தீவுப்பகுதி வைத்தியசாலைகளுக்கு நிரந்தரமாக கடமையாற்ற அனுப்பிவைக்க வேண்டும். தீவுப்பகுதி வைத்தியசாலைகளை தரமுயர்த்தி சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளுவதற்கான வசதிகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். தீவுப்பகுதி வைத்தியசாலைகளை மாற்றான் பிள்ளையை போல் பார்ப்பதை விடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இனியாவது இப்பகுதி வைத்தியசாலைகள் மீது அக்கறை காட்டுவார்களா?

வேலணை வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள்

நிவர்த்தி செய்யுமாறு வேண்டுகோள்

நோயாளர்கள் நலன்கருதி வேலணை அரசினர் பொது வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றை அனுப்பி வைக்குமாறு மாவட்ட சுகாதார பிரதிப்பணிப்பாளரிடம் பலமுறை மக்கள் வேண்டுகோள் விடுத்தும் அவர்கள் இவ்விடயத்தில் அக்கறை காட்டாது காலம் கடத்தி வருவதையிட்டு மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றார்கள்.

யாழ். நகரில் இருந்து 12கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது வேலணைக்கிராமம். இங்குள்ள மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் கடும் நோயாளர்களை ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை அல்லது யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைப்பதற்கு அம்புலன்ஸ் வண்டி இல்லாது வைத்தியசாலை நிர்வாகம் பெரும் சிரமப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இரவு நேரங்களில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்படும் கர்ப்பிணிப்பெண்களை மேற்படி வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்கு அனுப்பி வைப்பதற்கு இங்கு தனியார் வாகனங்களும் இல்லை.

இந்த நிலையில் ஊர்காவற்றுறை அரசினர் பொது வைத்தியசாலையிலிருந்து அம்புலன்ஸ் வண்டியை பெற வேண்டுமானால் வேலணை வைத்தியசாலையில் இருந்து யாராவது ஒருவரை கடற்படை முகாமுக்கு அனுப்பி அவர்களுக்கு தெரிவித்ததும் அவர்கள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு

உடன் அறிவித்து அதன் பின்பு பொலிசார் ஊர்காவற்றுறை பொது வைத்தியசாலைக்கு அறிவிப்பார்கள். அதன் பின்பே வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி அனுப்பி வைக்கப்படும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள குறைந்தது மூன்று மணித்தியாலமாவது செல்லும். இந்த நிலையில் அவசர நோயாளியின் நிலை கேள்விக்குறியாக இருந்து வருகின்றது.

தொலைபேசி வசதியில்லை

இவ்வைத்தியசாலையில் தொலைபேசி வசதியும் இல்லை. இரவு நேரங்களில் தனியார் தொலைபேசி நிலையங்களும் மூடப்பட்டிருக்கும். ஆகவே வைத்தியசாலைக்கு தொலைபேசி வசதி ஏற்படுத்துமாறு வைத்தியசாலை நிர்வாகம் பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரியும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை.

தளபாடப் பற்றாக்குறை

இதேவேளை ஆண் நோயாளர்களின் வாட்டுகளில் தளபாட பற்றாக்குறையும் நிலவுகின்றது. அத்துடன் பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட வாட்டுகளிலேயே பிரசவ தாய்மாரை தங்கவைக்க வேண்டிய நிலை இருந்து வருகின்றது. பிரசவ தாய்மாருக்கென தனியான வாட் ஒன்று இங்கு இல்லை. ஆகவே பிரசவத்தாய்மாருக்கு தனியான வாட் ஒன்றை அமைத்துத்தருமாறு வைத்தியசாலை நிர்வாகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரி வருகின்றது.

மேற்படி வைத்தியசாலை குறைபாடுகளை நிவர்த்தி செய்து நோயாளர்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவ வேண்டும். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலை கருதி இடம்பெயர்ந்த வேலணை மக்கள் குடும்பமாக தங்கள் சொந்த இடங்களுக்கு மீளக்குடியமர வந்து கொண்டிருக்கிறார்கள். இதனால்

இவ்வைத்தியசாலையில் நோயாளர்களின் வரவு அதிகரித்துக் கொண்டு போகின்றது. சராசரி வெளிநோயாளர் பகுதியில் தினமும் 100 நோயாளிகள் சிகிச்சை பெற்று செல்வதாக வைத்தியசாலை அதிகாரி Dr.திருநாவுக்கரசு தெரிவிக்கின்றார்.

இங்கு கடமையாற்றிவரும் வைத்திய அதிகாரி வாரத்தில் செவ்வாய்-வெள்ளி ஆகிய நாட்களில் புங்குடுதீவு வைத்திய சாலைக்குச் சென்று கடமையாற்றி வருகின்றார். இந்த நாட்களில் வைத்தியசாலை வைத்திய அதிகாரி இல்லாது செயலிழக்கின்றது. ஆகவே மேலதிக டாக்டர் ஒருவரை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் பல குறைபாடுகள் நிவர்த்தி செய்ய வேண்டுமென கோரிக்கை

"ஊர்காவற்றுறை மாவட்ட அரசினர் பொது வைத்திய சாலையை மீண்டும் வழமையான நிலைக்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என இப்பகுதி பொது மக்கள் நோயாளர்கள் இப்பகுதி பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் பின்பு மேற்படி வைத்தியசாலை சாதாரணமான அரசினர் கிராமிய வைத்தியசாலை தரத்தில் இயங்கிவருகின்றது. முன்னர் இவ்வைத்தியசாலையில் மாவட்ட

வைத்திய அதிகாரி ஒருவர் கடமையாற்றி வந்தார். தற்போது அப்போதிக்கரி தரத்திலான டாக்டர்களே வைத்திய அதிகாரிகளாக பணியாற்றி வருகின்றனர்.

இதனால் இவ்வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகள் நடைபெறுவதில்லை. உடன் மரணங்கள், விபத்து மரணங்கள், தற்கொலை மரணங்கள் நிகழ்ந்தால் மரண விசாரணையின் பொருட்டு நீண்ட தூரம் பிரயாணம் செய்து யாழ் அரசினர் போதனா வைத்தியசாலைக்கு இறந்தவரின் சடலங்கள் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு விசாரணைகள் நடைபெற்று மீண்டும் உறவினர்களிடம் சடலத்தை கையளிக்க நீண்ட நேரம் எடுப்பதாகவும் சில வேளைகளில் மறுநாள் வரை காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

ஆகவே ஊர்காவற்றுறை மாவட்ட அரசினர் பொது வைத்தியசாலைக்கு முன்புபோல் எம்.பி.பி.எஸ்.தரத்திலான மாவட்ட வைத்திய அதிகாரி ஒருவரை தாமதியாது மீண்டும் நியமிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை தொடர்ந்து இப்பகுதியில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து குடும்பமாக வேறு இடங்களில் தங்கி வசித்த மக்கள் மீண்டும் தங்கள் சொந்த ஊரான ஊர்காவற்றுறைக்கு குடும்பமாக திரும்புகின்றார்கள். இதனால் நோயாளர்கள் வரவும் தினசரி அதிகரித்துக்கொண்டு போகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரம்

முன்பு இவ்வைத்தியசாலைக்கென ஜெனரேட்டர் ஒன்று இருந்தது. அதில் ஏற்பட்ட பழுது காரணமாக திருத்துவதற்கு எடுத்துச்சென்ற அதிகாரிகள் இதுவரை அதை திருத்தி மீண்டும் ஒப்படைக்கவில்லை.

இதனால் இப்பகுதியில் மின்சார சபையினரால் வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மின்சாரத்திலேயே வைத்தியசாலையை இயக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளது. இரவு 10 மணியோடு மின்சாரம் நிறுத்தப்படும் அதன் பின்வு வரும் நோயாளர்களுக்கு அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் தான் சிகிச்சை அளிக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. குறிப்பாக ஆஸ்த்மா நோயால் அவஸ்தைப்பட்டு இரவு 10 மணிக்கு பிறகு வரும் நோயாளர்களுக்கு மின்சாரம் இல்லாது அவர்களுக்கு வேண்டிய சிகிச்சை அளிக்கமுடியாது வைத்திய அதிகாரிகள் திண்டாடுகின்றனர். திருத்துவதற்கென எடுத்துச்செல்லப்பட்ட ஜெனரேட்டரை உடன் திருத்தி மீண்டும் வைத்தியசாலையில் ஒப்படைக்கவேண்டும். அல்லது நோயாளர்களின் நலன்கருதி புதிய ஜெனரேட்டரை சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் வழங்கவேண்டும் என மக்கள் கோரிக்கையிடுகின்றனர்.

நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு போன்ற பகுதிகளுக்கு பிரதான வைத்தியசாலையாக இவ்வைத்தியசாலை இருந்து வருகின்றது. மேற்படி இடங்களிலிருந்து படகுகள் மூலம் பிரயாணம் செய்து இவ் வைத்தியசாலைக்கு நோயாளர்கள் வந்து செல்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தீவுப்பகுதி நோயாளர் அம்புலன்ஸ் படகை திருத்தி சேவைக்கு விடுமாறு வேண்டுகோள்

புங்குடுதீவு குறிகட்டுவான் இறங்குதுறையில் நீண்ட நாட்களாக பழுதடைந்து தரித்து நிற்கும் சமுத்திரதேவி நோயாளர் அம்புலன்ஸ் படகை உடன் திருத்தி சேவையில் ஈடுபட விடுமாறு தீவுப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். தீவுப்பகுதி நோயாளர்களின் நலன்கருதி யுனிசெவ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட இப்படகு குறுகிய கால சேவைக்குப் பின்பு பழுதடைந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளில் உள்ள கடும் நோயாளர்கள், கர்ப்பிணிப்பெண்கள், முதியோர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இதுபற்றி சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு பல தடவை முறைப்பாடு தெரிவித்தபோதும் அவர்கள் இதுவரை பழுதடைந்த அம்புலன்ஸ் படகை திருத்தி சேவையில் விடுவதில் அசமந்தப்போக்கைக் கடைப்பிடித்து வருவதாக நோயாளர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப் படுகின்றது.

இதேவேளை ஊர்காவற்றுறை அரசினர் பொது வைத்திய சாலைக்கு இரவு நேரங்களில் எழுவைதீவு, அனலைதீவு பகுதிகளில் இருந்து வரும் முட்டு, ஆஸ்மா போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் தனியார் படகுகளில் பிரயாணம் செய்யவேண்டிய அவல நிலை ஏற்படுகின்றது.

இதனால் இவர்கள் பல அசௌகரியங்களையும் அதிக பணத்தையும் செலவிட நேரிடுகின்றது. இது இவ்வாறு இருக்க புங்குடுதீவு அரசினர் பொது வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்று இல்லாததால் இப்பகுதி நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

இரவு நேரங்களில் இப்பகுதி கர்ப்பிணிப் பெண்கள் மகப் பேற்றுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு தனியார் வாகனங்களில் செல்ல வேண்டியுள்ளது. இதனால் இப்பகுதி தனியார் வாகனங்களுக்கு அதிக பணம் கட்டணமாக வழங்கவேண்டியுள்ளது. இப்பகுதியில் நூற்றுக்கு எழுபத்தைந்து வீத மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்ந்து வருபவர்கள். ஆகவே புங்குடுதீவு அரசினர் பொது வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றை அனுப்பி வைக்குமாறு நோயாளர்கள் தரப்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இடைநிறுத்தி வைக்கப்பட்ட அல்லைப்பிட்டி ஊடான யாழ் – ஊர்காவற்றுறை பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

யுத்த அனர்த்தங்களால் இடைநிறுத்தி வைக்கப்பட்ட யாழ் - அல்லைப்பிட்டி ஊடான ஊர்காவற்றுறை பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் வடபிரதேச இ.போ.ச. அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்தவந்த மக்கள் தற்போது தங்கள் சொந்த இடங்களான அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய

பகுதிகளுக்கு மீண்டும் திரும்பிக்கொண்டு இருக்கின்றார்கள். இப்பகுதிகளில் மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில் முயற்சிகளும் தற்போது நடைபெறுகின்றன.

சிலவேளைகளில் வெளியூர் மீனவர்களும் இப்பகுதியில் தங்கியிருந்து மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதி கடல் பிராந்தியத்தில் பிடிக்கப்படும் பாரிய மீன்கள் வாகனங்களில் யாழ்ப்பாணம், சின்னக்கடை சந்தைகளுக்கு கூடிய விலை விற்பதாக எடுத்துச் செல்லப்படுகின்றன.

பலத்த சேதம்

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய கிராமங்கள் 1990ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பலத்த சேதத்துக்குள்ளாகின. இப்பகுதியில் உள்ள நூறுக்கு மேற்பட்ட வீடுகள், இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் பலவும் சேதமடைந்தன.

தற்போது இந்த ஆலயங்களில் புனரமைப்பு பணிகள் இடம்பெற்று வருகின்றன. இராணுவ நடவடிக்கையின் போது முற்றாக அழிக்கப்பட்ட அல்லைப்பிட்டி, பராசக்தி வித்தியாலயம் நிர்மாணிக்கப்பட்டு புதிய மாடிக் கட்டிடங்களுடன் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. இங்கு மாணவர்களின் வரவும் முன்போல் அதிகரித்து காணப்படுகின்றது. அத்தோடு இங்கு பணி புரியும் அதிபர், ஆசிரியர்களில் அனேகமானவர்கள் யாழ். நகரில் இருந்து பஸ் வண்டிகளில் வந்து கடமையாற்றுகின்றனர். இதேபோல் மண்கும்பான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

சனநடமாட்டம் அதிகரிப்பு

அரச திணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள் மீண்டும் ஆரம்பித்து இயங்கி வருகின்றன. இதனால் இப்பகுதிகளில் ஜனநடமாட்டம் அதிகரித்துள்ளது. அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய கிராம மக்கள் தங்களுக்கு தேவையான அனேக பொருட்களை கொள்வனவு செய்ய யாழ். நகருக்கே செல்ல வேண்டியுள்ளது.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் கிராம மக்கள் யாழ். நகருக்கோ, ஊர்காவற்றுறை போன்ற தீவுப்பகுதிகளுக்கோ செல்லவேண்டுமானால் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் நடந்து சென்று அல்லைப்பிட்டி சந்தியில் நின்றே பஸ் சேவையைப் பெறவேண்டும். இதனால் சிறியோர், முதியோர்கள், நோயாளிகள் மிகுந்த சிரமத்துள்ளாகி வருகின்றார்கள்.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் பகுதிகளில் சுமார் 300க்கு மேற்பட்ட குடும்பங்கள் தற்போது மீளக்குடியேறியதாக தெரிவிக்கப்படுகின்றது. மேற்படி கிராமங்கள் ஓரளவு வழமைக்கு திரும்புகின்றன. இவர்கள் ஓரளவு இயல்பு வாழ்க்கையை ஆரம்பிக்க துவங்கிவிட்டனர்.

ஆகவே இடைநிறுத்தி வைக்கப்பட்ட யாழ். அல்லைப்பிட்டி ஊடான ஊர்காவற்றுறை பஸ் சேவையை மீண்டும் விரைவில் ஆரம்பித்தால் மேற்படி கிராமங்களில் வாழும் மக்கள் தங்கள் போக்குவரத்து பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடலாம். இங்குள்ள அரச திணைக்களங்களில் கடமையாற்றிவரும் வெளியூர் அரச ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள் தங்கள் கடமைக்கு

இலகுவாக வந்து செல்லமுடியும். ஏனைய தீவுப்பகுதி மக்களும் இலகுவாக இக்கிராமங்களுக்கு பிரயாணம் செய்யமுடியும்.

மினிபஸ் சேவையும் இல்லை

இப்பகுதியில் தனியார் மினிபஸ் சேவையும் இடம்பெறுவ தில்லை. ஆகவே மேற்படி கிராமங்களின் போக்குவரத்து பிரச்சினையை தீர்த்து வைக்க சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் முன்வரவேண்டும்.

மீளக்குடியமர்ந்துள்ள மண்டைதீவு மக்கள் அடிப்படை வசதிகளின்றித் திண்டாட்டம்

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலைத் தொடர்ந்து தமது சொந்த இடமான மண்டைதீவில் மீளக்குடியமர்ந்துவரும் மக்கள் பல அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

வன்னியிலும் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மண்டைதீவு மக்களே மீண்டும் தமது சொந்த இடங்களில் படிப்படியாக மீளக் குடியேறி வருகின்றனர்.

இவர்கள் இப்பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு, வைத்தியசாலையின்மை, மின்சாரத்துண்டிப்பு, போக்குவரத்து வசதியின்மை, வீடுகள் இன்மை போன்ற பல அடிப்படை பிரச்சினைகளையே எதிர்நோக்குகின்றனர்.

யாழ் நகரில் இருந்து 6 ½ கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இந்த கிராமத்தின் மக்களினதும் அபிவிருத்தியிலும் குடாநாடு அரசாங்க உயர் அதிகாரிகள் அரசியல்வாதிகள் ஏனோ பாராமுகமாகவே இருந்து வருகின்றனர்.

இங்குள்ள மக்களின் பிரச்சினைகள் பற்றி சம்பந்தப்பட்ட வர்களுக்கு நேரிலும் பத்திரிகைகள் ஊடாகவும் தெரியப்படுத்தியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வசூல் கட்டணம் போதாத காரணத்தால் இடை நிறுத்தப்பட்ட இ.போ.சபையைச் சேர்ந்த யாழ் மண்டைதீவு பஸ் வண்டிச் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவை கோரிக்கை விடப்பட்டபோதும் அவர்கள் அதை அலட்சியம் செய்தே வருகின்றார்கள். இதனால் மக்கள் போக்குவரத்து வசதியின்றி மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றார்கள். இங்கு தனியார் மினி பஸ் சேவைகளும் இல்லை. இந்த நிலையில் மக்கள் தங்கள் அன்றாட தேவைகளை நிறைவேற்றவும் தங்களுக்கு வேண்டிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கும் கால்நடையாகவே யாழ். நகருக்கு சென்று திரும்ப வேண்டியுள்ளது.

இப்பகுதி மக்களின் போக்குவரத்து பிரச்சினையை நிவர்த்தி செய்யுமுகமாக தினசரி யாழ். நகரில் இருந்து ஊர்காவற்றுறை வரை சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகள் காலையிலும் மாலையிலும் மண்டைதீவு ஊடாக இரு சேவைகளை யாவது நடத்தினால் இப்பகுதி மக்களின் போக்குவரத்து கஷ்டங்களை ஓரளவுக்கு நிவர்த்தி செய்யலாம்.

எனவே இ.போ.ச. வடபிரதேச அதிகாரிகள் இங்குள்ள மக்களின் போக்குவரத்து பிரச்சினைகள் பற்றி சிந்தித்து செயற்படவேண்டும்.

வீடுகள் இல்லை

மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது மண்டைதீவு கிழக்கு - தெற்கு பகுதிகளில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வறிய குடும்பங்களின் வீடுகள் முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன. மேற்படி வீடுகளில் வசித்த மக்கள் மீண்டும் சென்று அங்கு வாழ்க்கை நடத்துவதற்கு வீடுகள் இன்றி இரவில் வீதிகளிலும் பொது இடங்களிலும் தங்கி வருகின்றார்கள். ஆகவே இவர்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீடமைப்பு திட்டங்களை ஏற்படுத்தி வீடற்ற ஏழைகளுக்கு வீடுகள் வழங்க முன்வரவேண்டும்.

முன்னதாக தீவுப்பகுதிகளில் பல வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டபோதும் மண்டைதீவு புறக்கணிக்கப் பட்டது. எனவே இனியாவது இப்பகுதி வீடற்ற ஏழை குடும்பங்களின் நிலை கருதி வீடமைப்பு திட்டங்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுக்க முன்வரவேண்டும்.

யாழ். குடாநாட்டில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களும் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களும் இப்பகுதி வறிய குடும்பங்களின் கஷ்ட நிலை நீங்க பல வீடமைப்புத் திட்டங்களை உருவாக்கி வீடுகள் வழங்க உதவவேண்டும்.

நகர புற மக்களின் அபிவிருத்தியில் அக்கறையும் ஆர்வமும் காட்டும் இந்நிறுவனங்கள், அடிப்படை வசதிகள் எதுவும் இன்றி பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தீவுப்பகுதி மக்களின் மீதும் தமது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

இது விடயத்தில் வேலணை பிரதேச செயலர் அக்கறையும் ஆர்வமும் காட்டவேண்டும். அவர் இப்பகுதி மக்களின் கஷ்ட நிலையை வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களுக்கு எடுத்துக்கூறி தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யவேண்டும் என்று இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

தீவுப்பகுதி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை கல்வித்தரம் வீழ்ச்சியென பெற்றோர் புகார்

தீவுப்பகுதி பாடசாலைகளில் நீண்டகாலமாக நிலவி வரும் ஆசிரியர்கள் தட்டுப்பாட்டால் மாணவர்களின் கல்வித்தரம் பெரிதும் வீழ்ச்சியடைந்து வருகின்றது. பரீட்சை பெறுபேறுகள் ஏனைய பகுதிகளைவிட மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றன.

ஆகையால் தீவுப்பகுதிகளில் நிலவிவரும் ஆசிரிய தட்டுப்பாட்டை நிவிர்த்தி செய்து இப்பகுதி மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்துமாறு இப்பகுதி பெற்றோர்கள் வலயக்கல்வி பணிப்பாளரிடமும் மற்றும் திணைக்கள உயர் அதிகாரிகளிடமும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

தீவுப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கற்றுவரும் மாணவர்கள் மிகவும் வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். பணவசதி படைத்த குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள் யாழ் நகர முன்னணிப் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றார்கள். ஆகவே ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டுமானால் இங்கு நிலவிவரும் ஆசிரியத்தட்டுப் பாட்டை நிவிர்த்தி செய்ய வேண்டும்.

குறிப்பாக நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பாடசாலைகளில் ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சங்கீதம், சித்திரம் போன்ற பாடங்களைக் கற்பிக்க போதியளவு ஆசிரியர்கள் இல்லையென பாடசாலை வட்டாரங்கள் கவலை தெரிவிக்கின்றன.

கடலால் பிரிக்கப்பட்ட மேற்படி பாடசாலைகளில் கல்வி கற்பிக்க செல்ல ஆசிரியர்கள் பலர் விரும்புவது இல்லை என்றும் பெற்றோர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். நகரப் பாடசாலைகளில் நீண்ட காலமாக கல்வி கற்பித்து வரும் ஆசிரியர்களை தீவுப்பகுதி பாடசாலைகளுக்கு மாற்றம் கொடுத்து அனுப்பி வைக்க கல்வித் திணைக்கள அதிகாரிகள் முன்வரவேண்டும். இங்கு யாழ்.நகர பகுதிபோல் தனியார் பாடசாலைகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலர் ரீதியாக நியமனம் வழங்கப்பட்ட பயிலுனர் பட்டதாரிகளை தீவுப்பகுதி பாடசாலைகளுக்கு கல்வி கற்பிக்க கூடுதலாக அனுப்பி வைக்க சம்பந்தப் பட்ட கல்வி அதிகாரிகள் முன்வரவேண்டும். இதே போல் யாழ். கல்வியியற் கல்லூரியில் பயிற்சியை முடித்து வெளியேறிய ஆசிரியர்களையும் தீவுப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி வருகின்றார்கள். இதனால் தீவுப்பகுதி பாடசாலைகளில் தற்போது மாணவர்களின் வரவும் அதிகரித்து வருகின்றது. மாணவர்கள் தொகை கூடக் கூட ஆசிரியர்கள் தொகையும் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அல்லைப்பிட்டியில் வைத்தியசாலை இன்றி நோயாளர், கர்ப்பவதிகள் பெரும் அவதி

வேலணை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி பிரதேச பகுதியில் அரசினர் பொது வைத்தியசாலை இல்லாது இப்பகுதி மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர். தங்கள் வைத்திய தேவைக்கு நீண்ட தூரம் பிரயாணம் செய்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது.

இதனால் முதியோர்கள், சிறுவர்கள், கர்ப்பவதிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். இப்பகுதி மக்கள் முதலில் தங்கள் வைத்திய தேவைகளுக்கு அருகில் உள்ள மண்டைதீவு அரசினர் பொது வைத்தியசாலையைப் பயன்படுத்தி வந்தனர். தற்போது யுத்த அனர்த்தங்களால் மேற்படி வைத்தியசாலை பெரிதும் பாதிக்கப்பட்டு செயலிழந்து காணப்படுகின்றது. அத்துடன் அல்லைப்பிட்டியில் இருந்து மண்டைதீவுக்கு செல்லும் கடல் வீதியை பாதுகாப்பு காரணங்களுக்காக கடற்படையினர் மூடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அல்லைப்பிட்டிப் பகுதியில் அரசினர் பொது வைத்தியசாலை ஒன்றை நிரந்தரமாக நிர்மாணித்து தருமாறு இப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். ஆனால் அதிகாரிகள் மக்களின் வேண்டுகோளை தட்டிக் கழித்து வருகின்றனர். இதேவேளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லைப்பிட்டி மண்கும்பாள் மக்களின் வைத்திய தேவைகளை உணர்ந்து புதிதாக அரசினர் பொது வைத்தியசாலை ஒன்றை அல்லைப்பிட்டி பகுதியில் நிர்மாணிப்பதற்கு தங்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட

நிதியில் கூடிய பணம் ஒதுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொது வைத்தியசாலையை புதிதாக நிர்மாணிக்கும் வரை இப்பகுதியில் உள்ள பொது மண்டபம் ஒன்றில் தற்காலிகமாவாவது வைத்தியசாலை ஒன்றை திறக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அல்லது நடமாடும் வைத்திய சேவை ஒன்றையாவது வாரத்தில் இரு நாட்கள் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இது விடயத்தில் அக்கறை எடுத்து நடவடிக்கை எடுப்பார்களா என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

புங்குடுதீவு வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்திய அதிகாரியை நியமிக்கக் கோரிக்கை

புங்குடுதீவு மக்களின் நலன் கருதி புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி ஒருவரை நிரந்தரமாக நியமித்து தினமும் வைத்தியசாலையை இயங்கச் செய்வதுடன் இவ்வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்றையும் வழங்குமாறு இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை புங்குடுதீவு அரசினர் பொது வைத்தியசாலை தற்காலிகமாக வாரத்தில் திங்கள், வெள்ளி ஆகிய இரு நாட்கள் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் அங்கு நிரந்தரமாக வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்கவுள்ள தாகவும் யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

மேற்படி வைத்தியசாலை முன்பு வாரத்தில் இரு நாள் இயங்கிய போது இப்பகுதி மக்கள் தினமும் வைத்தியசாலையை இயங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்து அங்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை அனுப்பி இவ்வைத்தியசாலை தினமும் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பின்பு மேற்படி வைத்தியசாலை அதிகாரி நெடுந்தீவுக்கு மாற்றப்படவுள்ளார் என்று அறிந்த புங்குடுதீவு மக்கள் கடந்த வாரம் புங்குடுதீவு அரசினர் பொது வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்கக் கோரி ஊர்வலமாக சென்று மாவட்ட சுகாதார பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றை கையளித்திருந்தனர் என்பது தெரிந்ததே.

இவ்விடயம் குறித்து மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரில் இருந்து 20 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள புங்குடுதீவுப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது மீளக் குடியமர ஆரம்பித்துள்ளனர். இதனால் புங்குடுதீவு அரசினர் பொது வைத்தியசாலை வாரத்தில் முழுநாளும் இயங்கவேண்டியது மிகவும் அவசியமானது ஆகும். மற்றைய நாட்களில் புங்குடுதீவு மக்கள் நீண்ட தூரம் பிரயாணம் செய்து யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்றே தங்கள் வைத்திய தேவைகளை நிறைவேற்றுகின்றனர்.

இதனால் முதியவர்கள், கர்ப்பிணிப்பெண்கள், சிறுவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். கடும் நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க முடியாத நிலை. இங்கு அம்புலன்ஸ் வண்டி இல்லை. ஆகவே இங்குள்ள

மக்கள் தனியார் வாகனங்களை சுமார் 1500, 2000 ரூபாவுக்கு வாடகைக்கு பெற்று செல்ல வேண்டிய அவல நிலை. இங்கு வசித்து வரும் மக்களில் 75 வீதமானோர் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்பவர்கள். ஆகவே இங்குள்ள மக்களின் நலன் கருதி புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு மேலும் தாமதியாது நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிப்பதுடன் அம்புலன்ஸ் வண்டி ஒன்றையும் அனுப்பி வைக்குமாறு மக்கள் கோரி வருகின்றார்கள்.

தீவுப்பகுதி வீதிகள் பெரும் சேதம் புனரமைக்குமாறு வேண்டுகோள்

மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தீவுப்பகுதி வீதிகளை புனரமைக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவ்வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

தீவுப்பகுதி வீதிகள் அனைத்தும் பலத்த சேதமடைந்துள்ளன. இதனால் மேற்படி வீதிகளால் போக்குவரத்து செய்யும் வாகனங்களும் பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் வீதி அபிவிருத்திச் சபை அதிகாரிகளுக்கு முறைப்பாடு தெரிவித்தும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

யாழ். மாவட்டத்தில் ஏனைய பகுதிகளில் உள்ள வீதிகளைப் புனரமைப்பதில் செலுத்தப்படும் ஆர்வம் தீவுப்பகுதி

வீதிகளை புனரமைப்பதற்கு செலுத்தப்படுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். இது விடயம் குறித்து வீதி அபிவிருத்தி திணைக்களமோ வீதி அபிவிருத்தி அதிகாரசபையோ உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

பெருந்தெருக்கள் திணைக்களம் 1984ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையாக மாற்றப்பட்டதிலிருந்து வீதிகள் புனரமைப்பு பணிகள், புதிதாக வீதிகள் நிர்மாணிக்கும் பணிகள் என்பன லாப நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றதே தவிர தரமான முறையில் வீதிகள் செப்பனிடப்படுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றார்கள். இதேவேளை ஊர்காவற்றுறை பிரதான வீதியிலிருந்து அல்லைப்பிட்டி செல்லும் பிரதான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படவில்லை. இதனால் இவ்வீதியால் பஸ் சேவை ஒன்றை நடத்த முடியாது என இ.போ.ச. வடபிராந்திய அதிகாரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

எனவே மேற்படி வீதியை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் விரைவாக புனரமைத்து தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றார்கள். வீதிகள் பழுதடைந்துள்ளதால் மேற்படி வீதியூடாக நடைபெற்று வந்த 173 இலக்க பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே குறிப்பிட்ட இவ்வீதியை உடன் தாமதியாது புனரமைத்து இவ்வீதியால் பஸ் சேவை ஒன்றை நடத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

யாழ் – ஊர்காவற்றுறை பஸ் சேவை இடைநிறுத்தம், தீவுப்பகுதி மக்கள் பெரும் சிரமம், இறங்கு துறையை இடமாற்றுமாறும் வேண்டுகோள்

யாழ் மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவிலடி இறங்குதுறை வரை நேரடியாக போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த பஸ் சேவை பாதை சரியில்லாத காரணத்தால் இடைநிறுத்தப்பட்டுள்ளதையடுத்து அனலைதீவு, எழுவைதீவு செல்லும் பிரயாணிகள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

தனியார் மினிபஸ் வண்டிகள் மூலம் மேற்படி இறங்கு துறையில் இருந்து ஊர்காவற்றுறை வரை பிரயாணம் செய்து அங்கிருந்து யாழ் நகருக்கு பஸ் வண்டிகளில் தங்கள் பிரயாணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள், ஊர்காவற்றுறை, கண்ணகி அம்மன் கோவிலடி இறங்கு துறைக்கு செல்லும் பிரதான வீதியை தாமதமின்றி புனரமைத்து முன்பு போல் சேவையை நடத்த முன்வரவேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நீண்டகாலமாக இயங்கி வந்த ஊர்காவற்றுறை இறங்கு துறைக்கு கடற்படையினர் அண்மையில் பாதுகாப்பு காரணமாக கண்ணகி அம்மன் கோவிலடி இறங்குதுறைக்கு மாற்றினர்.

தற்போது நிலவும் சமாதான சூழ்நிலையில் ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவிலடி இறங்குதுறைக்கு மாற்றப்பட்ட ஊர்காவற்றுறை இறங்கு துறையை மீண்டும் ஊர்காவற்றுறையில் இயங்க செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென்று அனலைதீவு, எழுவைதீவு பிரயாணிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஊர்காவற்றுறை இறங்குதுறை, ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவிலடி இறங்கு துறைக்கு மாற்றப் பட்டுள்ளதால் ஊர்காவற்றுறை நகர வர்த்தகர்கள் தங்கள் வியாபார நடவடிக்கைகளில்வீழ்ச்சி அடைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றார்கள்.

குமுதினி படகு பழுதடைந்து இரு மாதங்கள் ஆகியும் எவரும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையெனப் புகார்

புங்குடுதீவு குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்குமிடையில் பிரயாணிகள் படகு சேவையில் ஈடுபட்டு வந்த அரச படகான குமுதினி படகில் ஏற்பட்ட பழுது காரணமாக சேவை இடை நிறுத்தப்பட்டு இரு மாதங்களுக்கு மேலாகியும் எவரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென பாதிக்கப்படும் மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

யாழ் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ் இடம்பெற்ற மேற்படி படகுச்சேவை படகில் ஏற்பட்ட பழுது காரணமாக் அதனை திருத்துவதற்காக எடுத்து சென்ற மேற்படி சபையினர் அதை விரைவாக திருத்தி மீண்டும் சேவையில் விடுவதில் காலம் கடத்தி வருகின்றார்கள் எனவும் மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றனர்.

அடிக்கடி குமுதினி படகு பழுதடைவதனால் நெடுந்தீவு பிரயாணிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

தற்போது நெடுந்தீவு பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் பொருட்கள் ஏற்றி இறக்கும் படகுகளில் மக்கள் பிரயாணங்களை மேற்கொள்வதால் பல தரப்பட்ட அசௌகரியங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. இது விடயம் குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கு இப்பகுதி பொது ஸ்தாபன உறுப்பினர்களும் பிரயாணிகளும் பல தடவை முறைப்பாடு தெரிவித்தும் குமுதினி படகு சேவை விடயத்தில் சம்பந்தப்பட்ட சபை உயர் அதிகாரிகள் ஏனோ தானோ என்ற நிலையில் அசட்டையாக இருக்கின்றனர் என்று நெடுந்தீவு மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சபையின் அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் அக்கறையின்மையுமே இப்படகு அடிக்கடி பழுதடைவதற்கு காரணம் என்று மக்கள் மேலும் கூறுகின்றார்கள்.

கடல் போக்குவரத்து தடைப்படும் அபாயம்

இதேவேளை நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவான் இறங்கு துறைக்கு மிடையில் தற்போது படகுச்சேவையில் ஈடுபட்டு வரும் நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத்தின் படகுகளும் அடிக்கடி இயந்திரக் கோளாறுகளுக்கு உட்படுவதால் எந்த வேளையிலும் திருத்த வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் திருத்த வேலைகள் உரிய நேரத்தில் இடம்பெறாவிடின் சங்கப் படகுகளின் இயந்திரங்களில் பல சிக்கல்கள் தோன்றக்கூடும் என்று நெடுந்தீவு பல.நோ.கூ.சங்க அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் நெடுந்தீவுக்கான கடல்போக்குவரத்து எந்த நேரமும் முற்றாகத் தடைப்படலாம்.

ஆகவே தற்போது நோயாளர் சேவைக்கென நிர்மாணிக்கப்பட்ட சமுத்திர தீபம் அம்புலன்ஸ் படகை குமுதினி திருத்தப்பட்டு மீண்டும் பிரயாணிகள் சேவையில் ஈடுபடவரும் வரை நெடுந்தீவுக்கான தற்காலிக பிரயாணிகள் சேவையில் ஈடுபடுத்த அரச அதிபரின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்று நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத் தலைவர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புங்குடுதீவுக்கு மின்சாரம் வழங்குவதில் அதிகாரிகள் அசமந்தம் பெரும் அவதியென மக்கள் புகார்

இராணுவ நடவடிக்கையின்போது புங்குடுதீவுப் பகுதியில் துண்டிக்கப்பட்ட மின்சாரம் இன்றுவரை மீண்டும் வழங்கப்படவில்லை என இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இது விடயம் குறித்து இலங்கை மின்சாரசபையின் யாழ் மாவட்டக் கிளை அதிகாரிகளுக்கு பல தடவை தெரிவித்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை.

இராணுவ நடவடிக்கையின்போது புங்குடுதீவு பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வன்னியிலும் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்த மக்கள் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பி வருகின்றார்கள். மீளக்குடியேறிய மக்கள் இப்பகுதியில் அடிப்படை வசதிகள் இன்றி பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

வேலணை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களுக்கு துண்டிக்கப் பட்ட மின் இணைப்பை மீண்டும் வழங்கிய இலங்கை மின்சார சபையின் யாழ். பிராந்திய அதிகாரிகள் புங்குடுதீவுப் பகுதிக்கு மின் இணைப்பை மீண்டும் அமைத்துக் கொடுப்பதில் காலம் கடத்துகின்றார்கள்.

இப்பகுதியில் உள்ள சிறு தொழிற்சாலைகளும் மின்சாரம் இன்றி செயலிழந்து காணப்படுகின்றன. இதனால் சில தொழிலாளிகள் வேலை வாய்ப்பு இல்லாது உள்ளனர்.

பாடசாலை மாணவர்களும் இரவு நேரங்களில் கல்வி கற்க பெரிதும் கஷ்ட நிலைக்குள்ளாகி வருகின்றனர். இவர்கள் குப்பி விளக்குகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

இதேவேளை மின்சாரம் துண்டிக்கப்பட்டதை சாதகமாக பயன்படுத்தி இரவு நேரங்களில் திருடர்கள் வீடுகளுக்குள் புகுந்து பொருட்களை சூறையாடி வருகின்றனர்.

இப்பகுதி வீதிகளில் மின்விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் பாதசாரிகளும் வாகனச் சாரதிகளும் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே இப்பிரச்சினைக்கு முடிவுகட்ட துண்டிக்கப்பட்ட மின் இணைப்பை மீண்டும் அமைத்துக்கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று இப்பகுதி மக்கள் உருக்கமாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

படையினர் எடுத்த அரச படகுகள் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை

தீவுப்பகுதி மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தனியார் படகுகளில் பயணம்

அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு ஆகிய தீவுப் பகுதிகளுக்கு கடல் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த அலை அரசி, வலம்புரி போன்ற அரச படகுகள் கடற்படையினரின் தேவை கருதி அவர்களால் எடுத்துச்செல்லப்பட்டு நீண்ட காலமாகியும் இது வரை மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்காத காரணத்தால் மேற்படி தீவுப்பகுதிகளுக்கு தனியார் துறைப் படகுகளே தற்போது சேவையில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் மேற்படி தீவுகளை சேர்ந்த பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

அனலைதீவு பயணி ஒருவர் இது குறித்து கருத்து தெரிவிக்கையில் :-

அரச படகுகளில் மேற்படி தீவுப் பகுதிகளுக்கு பயணம் செய்யும் போது மிகக் குறைந்த பணமே கட்டணமாக பெறப்படுகின்றது. தற்போது தனியார்துறைப் படகுச் சேவைக்கு அதிக பணம் கட்டணமாக வசூலிக்கப்படுகின்றது. அத்துடன் மிகவும் பழமை வாய்ந்த படகுகளே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதால் பயணிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டார்.

குமுதினி இன்னும் திருத்தப்படவில்லை

இதேவேளை குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையில் கடல் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவந்த அரச படகான குமுதினி படகு பழுதடைந்து நீண்ட நாட்களாகியும் அது திருத்தப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படாமை குறித்து கடற்பயணிகள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றார்கள்.

நெடுந்தீவு மக்கள் தங்கள் பயணத்தை தற்போது நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கத்துக்கு சொந்தமான பொதிகள் ஏற்றி இறக்கும் பணிகளில் ஈடுபடும் படகுகளில் பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வருகின்றார்கள்.

கடந்த வாரம் இவ்வாறு நெடுந்தீவில் இருந்து தனியார் படகு மூலம் குறிகாட்டுவானுக்கு பயணத்தை மேற்கொண்ட யாழ் பரியோவான் கல்லூரி ஆசிரியர் ஜெயசீலன் என்ற குடும்பஸ்தர் படகில் இருந்து கடலுக்குள் வீழ்ந்து விட்டார் என்றும் இவரது சடலம் கடல் கொந்தளிப்பு காரணமாக இது வரை கண்டு பிடிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பற்ற தனியார் படகுகளில் தொடர்ந்து பயணம் செய்ய நெடுந்தீவு மக்கள் அஞ்சுகின்றனர். ஆகவே பழுதடைந்த குமுதினி படகை உடன் திருத்தி சேவையில் ஈடுபடுத்துமாறும் அல்லது குமுதினிக்கு பதிலாக வேறு ஒரு அரச படகைச் சேவையில் ஈடுபடுத்த முன்வருமாறும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

ஆனால் இவ்விடயத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரோ மற்றும் அரச உயர் அதிகாரிகளோ அக்கறை காட்டாது ஏனோ தானோ என்று இருப்பது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

மண்டைதீவு வைத்தியசாலை மூடப்பட்டது அல்லைப்பிட்டி நோயாளர் பெரும் அவதி

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அல்லைப்பிட்டி கிராமத்தின் அரசினர் பொது வைத்தியசாலை இது வரை நிர்மாணிக்கப்பட வில்லை. இதனால் இப்பகுதி மக்கள் தங்கள் வைத்திய தேவைகளுக்கு மண்டைதீவு அரசினர் பொது வைத்தியசாலைக்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் செல்ல வேண்டிய அவல நிலை உள்ளது.

தற்போது மண்டைதீவு அரசினர் பொது வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதால் அல்லைப்பிட்டி மக்கள் தங்கள் வைத்திய தேவைகளுக்கு நீண்ட தூரம் நடந்து அல்லைப்பிட்டி சந்திக்கு சென்று அங்கிருந்து பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்று வருகின்றார்கள்.

இதனால் கர்ப்பிணிப்பெண்கள், முதியோர்கள், சிறியோர்கள் மிகவும் கஷ்ட நிலையை எதிர்நோக்குகின்றனர். ஆகவே அல்லைப்பிட்டி பகுதியில் நிரந்தரமாக அரசினர் பொது வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்து தருமாறு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்கு மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இது விடயத்தில் அக்கறை எடுத்து அல்லைப்பிட்டி நோயாளர்களின் நலன் கருதி பாராளுமன்ற உறுப்பினர்கள் இப்பகுதியில் பொது அரசினர் வைத்தியசாலை ஒன்றை நிறுவ தங்கள் அபிவிருத்தி நிதியில் கூடிய பணத்தை ஒதுக்கி கொடுக்க முன்வரவேண்டும் எனவும் கேட்கின்றனர்.

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையின் கட்டிட பற்றாக்குறை நிவர்த்திக்கப்படுமா?

திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நீண்ட நாட்களாக நிலவிவரும் கட்டிடப் பற்றாக்குறையால் இப் பாடசாலையில் கல்வி கற்றுவரும் ஆரம்ப பிரிவு மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். வறுமை கோட்டுக்குக்கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே அதிகமாக இங்கு கல்வி கற்று வருகின்றார்கள். ஆகவே இவர்கள் கட்டிட பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு மேலும் புதிய கட்டிடங்களை நிர்மாணித்து ஏழை மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவுமாறு சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுத்து வருகின்றார்கள்.

இப்பாடசாலையின் கட்டிட பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டு 25 அடி நீளமும் 60 அடி அகலமும் கொண்ட மாடிக்கட்டிடம் நிர்மாணிப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. எனினும் பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழல் காரணமாக அது இடைநிறுத்தப்பட்டது. கடந்த 2001ம் ஆண்டு யு.என்.எச்.சி.ஆர்.

நிறுவனத்தின் நிதி உதவியுடன் மேற்படி கட்டிடத்தின் கீழ் தளம் பூர்த்தி செய்யப்பட்டது.

முன்னாள் புனரமைப்பு புனர்வாழ்வு மாண்புமிகு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்பாடசாலையின் மிகுதி கட்டிட வேலைகளுக்கென 4 இலட்சம் ரூபா நிதியை வழங்கி உதவினார்.

இந்த பணத்தைக் கொண்டு 25அடி நீளமும், 30 அடி அகலமும் கொண்ட மேல் மாடித்தளம் மட்டும் நிர்மாணிக்க முடிந்தது.

மிகுதியாகவுள்ள 30 அடி நீளம் 25 அடி அகலம் கொண்ட மாடித்தள வேலைகள் பூர்த்தியாகாமல் இருப்பதனால் அக்கட்டிட மேல் தளத்தை முழுமையாகப் பாவிக்க முடியாமல் உள்ளதாக பாடசாலை அதிபர் க.ஜெயானந்தன் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள அரசினர் பாடசாலைகளை இரண்டு வகையான பாடசாலைகளாக மாற்றி அமைக்குமாறு உலக வங்கி இலங்கை அரசுக்கு சிபார்சு செய்துள்ளதாக கூறப்படுகின்றது. இதன்படி இப்பாடசாலை எதிர்காலத்தில் தரம் 1 முதல் 9 வரையான வகுப்புகள் கொண்டதாக அமையவுள்ளது.

அப்பொழுது மேலும் புதிய கட்டிடங்களும் புதிதாக நிர்மாணிக்க வேண்டிய தேவையும் ஏற்படும்.

அதோடு பாடசாலைக்கென விளையாட்டு மைதானமும் மிக அவசியமாக தேவைப்படுகின்றது. ஆனால் பாடசாலையின் எல்லையில் 6 பரப்பு கொண்ட வெற்றிட காணித்துண்டு ஒன்று உண்டு.

இக்காணிக்குரிய பெறுமதியை காணிச் சொந்தக்காரர் களிடமிருந்து பாடசாலை விளையாட்டு மைதான பாவிப்புக்கு வாங்கித் தருமாறு கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு பல தடவைகள் பாடசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை. மேலும் இப்பாடசாலையில் தரம் 1 வகுப்பு தவிர ஏனைய வகுப்பறைகள் திறந்த நிலையில் உள்ளன.

எனவே சகல வகுப்பு அறைகளையும் பூட்டிப் பாதுகாக்கக் கூடிய முறையில் மாற்றியமைக்க மாவட்டக் கல்வித் திணைக்களம் முன்வரவேண்டும்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுத்து இப்பாடசாலையின் அடிப்படைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வார்களா?

வடபகுதி பத்திரிகையாளர்களுக்கும் அரசாங்க சலுகைகள் வழங்கப்படவேண்டும் பத்திரிகையாளர் சங்க உபதலைவர் இராமச்சந்திரா (ஜே.பி)

தென் இலங்கை பத்திரிகையாளர்களுக்கும் கிழக்கு மாகாண பத்திரிகையாளர்களுக்கும் அரசாங்கத்தால் வழங்கப்படும் சலுகைகள் வடபகுதி பத்திரிகையாளர்களுக்கு கிடைப்பதில்லை. இதுவிடயம் குறித்து வடபகுதி பத்திரிகையாளர்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக் கின்றார்கள்.

இவ்வாறு வட இலங்கை பத்திரிகையாளர் சங்க உபதலைவர் எஸ்.என்.இராமச்சந்திரா தெரிவித்தார். வட இலங்கை

பத்திரிகையாளர் சங்கக் கூட்டம் அண்மையில் சங்கத்தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் சங்க அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சங்க உபதலைவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் :-

வடபிரதேச பத்திரிகையாளர்களுக்கும் சங்க அலுவலகத்துக்கும் தொலைபேசி சலுகை கட்டணத்துடன் தொலைபேசி இணைப்புகோரி மேற்படி சங்க நிர்வாகம் யாழ்.ரெலிகொம் நிறுவனத்துக்கு கடிதம் ஒன்று கையளித்து பல மாதங்களாகியும் யாழ் ரெலிகொம் நிறுவனம் இது வரை தொலைபேசி இணைப்பு வழங்காது இழுத்தடித்து வருகின்றது என பத்திரிகையாளர்கள் தெரிவிக்கின்றார்கள். பத்திரிகை தொழிலுக்கு தொலைபேசி மிகவும் அவசியமான போதும் ரெலிக்கொம் நிறுவனத்தினர் தொலைபேசி இணைப்பு வழங்குவதில் காலம் கடத்தி வருகின்றனர். இது விடயத்தில் அரசாங்க உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் பாராமுகமாகவே இருந்து வருகின்றனர். ஆகவே உடனடியாக தொலைபேசி இணைப்பை வழங்கக்கோரி சங்க உறுப்பினர்கள் யாழ் ரெலிகொம் நிறுவனத்துக்கு முன்பாக சாத்வீகமான முறையில் மறியல் போராட்டம் ஒன்றை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

கூட்ட இறுதியில் ரெலிக்கொம் நிறுவனம் தொலைபேசி இணைப்பு வழங்காது இழுத்தடித்தால் ஊடகத்துறை அமைச்சர் ஊடாக புனர்வாழ்வு புனரமைப்பு மீளக்குடியேற்ற அமைச்சர் ஜெயலத்துக்கு கடிதம் மூலம் முறைப்பாடு செய்வதென்று முடிவு எடுக்கப்பட்டது.

மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு ஒரேயொரு கால்நடை வைத்திய நிலையம் பெரும் அவலம் என மக்கள் புகார்

வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய மூன்று பிரதேச செயலர் பிரிவுகளுக்கு பொதுவாக வேலணை வங்களாவடி சந்திக்கு அருகாமையிலேயே அரசினர் கால்நடை வைத்திய நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது.

இதனால் மேற்படி பிரதேசங்களில் வசித்து வரும் மக்கள் தங்கள் கால்நடைகளுக்கு சுகயீனம் அடைந்தாலோ அல்லது தங்கள் கால்நடைகளுக்கு செயற்கை முறையான சினைப்படுத்தல் தேவைகளுக்கோ மற்றும் கால்நடை நோய்கள் பற்றிய ஆலோசனைகள் பெறவோ நீண்டதூரம் பஸ் வண்டிகளிலும் படகுகளிலும் பிரயாணம் செய்து அதிக பணம் செலவு செய்தே வேலணை அரசினர் கால்நடை வைத்தியசாலைக்கு வரவேண்டிய அவலநிலை ஏற்படுகின்றது என இப்பிரதேச மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

பிரதேச செயலர் பிரிவுக்கு ஒரு அரசினர் கால் நடை வைத்திய நிலையத்தை அரசாங்கம் அமைத்துக் கொடுத்தாலும் அப்பிரதேச மக்கள் அந்தந்த பிரதேச அரசினர் கால்நடை வைத்திய நிலையம் ஊடாக தங்கள் தேவைகளை இலகுவாக நிறைவேற்றிக் கொள்ளமுடியும்.

இது குறித்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களோ, சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகளோ, வடக்கு - கிழக்கு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களமோ, யாழ் மாவட்ட அரசாங்க

அதிபரோ மேற்படி மூன்று பிரதேச செயலர் பிரிவு மக்களின் போக்குவரத்து கஷ்ட நிலை உணராதது குறித்து இப்பகுதி மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றனர்.

இனிமேலாவது பிரதேச செயலர் பிரிவுகளில் மக்களின் போக்குவரத்து பிரச்சினைகளை உணர்ந்து இவர்கள் பிரதேச செயலர் பிரிவுக்கு ஒரு அரசினர் கால் நடை வைத்திய நிலையத்தை அமைத்துக்கொடுப்பார்களா?

இது விடயம் குறித்து வேலணை அரசினர் கால்நடை வைத்தியர் டாக்டர் செல்வி எவ்.யூரியானாவை அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடியபோது அவர் தெரிவித்ததாவது:-

பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் இயங்குகின்ற மூன்று பிரதேச செயலர் பிரிவு மக்களுக்கு பொதுவாக எமது கால்நடை வைத்திய நிலையம் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது.

இந்த வைத்திய நிலையத்தில் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக கால்நடை வைத்தியராகக் கடமையாற்றி வரும் நான் இப்பகுதி மக்களின் கால்நடைகள் பற்றிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு மிகவும் சிரமப்படவேண்டியுள்ளது. எனது அலுவலகத்துக்கென ஒரு தனியான வாகனம் இதுவரை நிரந்தரமாக வழங்கப்படாததே இதற்குரிய காரணமாகும்.

என்னுடன் மூன்று கால்நடை போதனாசிரியர்கள் எனது அலுவலகத்தில் கடமையாற்றி வருகின்றார்கள். அவர்களும் துவிச்சக்கர வண்டிகளிலும் பஸ் வண்டிகளிலும் நீண்ட தூரம்

பிரயாணம் செய்தே தங்கள் கடமைகளை பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொண்டு வருகின்றனர். ஆகவே அவர்கள் தங்கள் கடமைகளை கஷ்டமின்றி மேற்கொள்ள அவர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்க மேல் அதிகாரிகளுக்கு சிபார்சு செய்துள்ளேன். நான் கூட நீண்ட தூரம் சைக்கிள் வண்டியில் பிரயாணம் செய்தே எனது கடமைகளைச் செய்ய வேண்டிய அவல நிலையும் ஏற்படுவது உண்டு.

ஆறுமாதங்களாக குளிர்சாதனப் பெட்டி இயங்காத நிலையில்

எமது வைத்திய நிலையத்தில் உள்ள சூரிய மின்கலம் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு களவு போய்விட்டது. இதனால் இங்குள்ள குளிர்சாதனப்பெட்டிகள் இயங்க முடியாது உள்ளன. இதனால் கால்நடைகளுக்கு தேவையான மருந்துவகைகளை பாதுகாப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றது. குறிப்பாக கால்நடைகள் செயற்கை முறையான சினைப்படுத்தலுக்கு தேவையான மருந்துகளை திருநெல்வேலி கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தில் இருந்து எடுத்து வந்தாலும் அதை உரிய முறையில் வைத்து பாதுகாக்க முடியாமல் கஷ்டப்படுகின்றோம்.

இப்பிரச்சினை குறித்து கடந்த 2 மாதங்களுக்கு முன்பு உத்தியோக பூர்வமாக எமது வைத்திய நிலையத்துக்கு விஜயம் செய்த வடக்கு - கிழக்கு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எஸ்.சிவலிங்கத்திடம் தெரிவித்தேன். வெகு சீக்கிரத்தில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று உறுதியளித்துச் சென்றுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச மக்களின் போக்குவரத்து பிரச்சினையை முன்னிட்டு அப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரம்பொன் என்ற இடத்தில் வாரத்தில் வியாழக்கிழமை மட்டும் எமது வைத்தியசாலை நிலையத்தின் உப அலுவலகம் ஒன்று இயங்கி வருகின்றது. வெகுவிரைவில் வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு என்னும் இடத்தில் வியாழக்கிழமைகளில் மட்டும் எமது வைத்திய நிலையத்தின் உப அலுவலகம் ஒன்றை திறக்க முயற்சி எடுத்து வருகின்றேன்.

பஸ் வண்டிகளில் பயணம்

எமது நிலையத்தில் கடமையாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் யாழ். நகரில் இருந்து தினமும் பஸ் வண்டிகளில் வந்து செல்கிறார்கள். எங்களுக்கு எமது தினைக்களம் விடுதி வசதிகள் செய்து தரவில்லை.

எமது பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட தினைக்கள அதிகாரிகள் உணர்ந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்றார்.

இறங்குதுறை மாற்றத்தால் தீவகப்பகுதிக்கு செல்வோர் பெரும் சிரமம்

ஊர்காவற்றுறை நகரப்பகுதியில் அமைந்திருந்த இறங்கு துறையை கடற்படையினர் பாதுகாப்பு காரணங்களுக்காக ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவிலடிக்கு மாற்றியதையடுத்து எழுவைதீவு, அனலைதீவு பிரதேசங்களுக்கு படகுகள் மூலம் செல்லும் பிரயாணிகள் குடிநீர் தட்டுப்பாடு,

தங்குமிடமின்மை போன்ற பல தரப்பட்ட சிரமங்களுக்குள்ளாகி வருகின்றார்கள்.

ஆகையால், ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் கோவிலடிக்கு மாற்றப்பட்ட இறங்குதுறையை தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை அடுத்து மீண்டும் ஊர்காவற்றுறை நகரப்பகுதிக்கு மாற்றுமாறு இப்பகுதி பிரயாணிகள், பொதுமக்கள், ஊர்காவற்றுறை நகர வர்த்தகர்கள் ஆகியோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

எழுவைதீவு, அனலைதீவு மக்கள், கண்ணகி அம்மன் கோவிலடி இறங்குதுறையில் இருந்து நேரடியாக பஸ் வண்டிகளில் யாழ் நகருக்கு சென்று திரும்புகின்றனர். இதனால் ஊர்காவற்றுறை நகரப்பகுதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்ததோடு ஊர்காவற்றுறை நகரப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் வியாபாரமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதேவேளை யுத்த அனர்த்தங்களால் பலத்த சேதத்துக்குள்ளான ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழ் உள்ள பொதுச்சந்தை மீண்டும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு பல நாட்களாகியும் திறப்பு விழா இன்னமும் நடைபெறவில்லை.

ஊர்காவற்றுறை பிரதேசசபை திறப்பு விழாவை நடத்தகாலம் தாழ்த்தி வருகின்றது. இதனால் சந்தைக் கட்டிடத்தில் கடைகள் நடத்தியவர்கள் வேறு இடங்களில் கூடுதல் வாடகை செலுத்தி கடைகள் நடத்தி வருகின்றனர்.

எனவே புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொதுச் சந்தைக் கட்டிடத்தில் உள்ள தமது கடைகளை மீண்டும் தமக்கு ஒப்படைக்க

நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகர்கள் ஊர்காவற்றுறை பிரதேசசபை செயலாளர், மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதனை அடுத்து சந்தைக் கட்டிடத்தில் உள்ள கடைகளை கடை உரிமையாளர் மீண்டும் திறந்து வியாபாரத்தை ஆரம்பிக்கலாம் என்றும் அதன் கடை இரும்புக் கதவுகளை அவரவர்களே சொந்தப்பணத்தில் அமைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தார்கள்.

நயினாதீவில் சமூக விரோதச் செயல்கள் அதிகரிப்பு முறையிட பொலிஸ் நிலையமும் இல்லையென புகார்

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தில் இயங்கிவரும் கள்ளுத் தவறணையை ஜனசந்தடி இல்லாத வேறு ஒரு இடத்துக்கு மாற்றுமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். தற்போது மக்கள் நடமாட்டம் உள்ள அரசினர் பொது வைத்தியசாலை, அரசினர் பாடசாலை, சைவ ஆலயங்கள் ஆகிய பகுதிகளின் மத்தியில் மேற்படி கள்ளுத்தவறணை அமைந்து இருப்பதால் இப்பகுதி மக்கள் பல தரப்பட்ட சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை நயினாதீவுப்பகுதியில் உள்ள சில ஆண்களும் பெண்களும் சேர்ந்து சட்ட விரோதமாக மதுபானம் செய்து வருகின்றார்கள். இதனால் மதுபானம் பாவிப்போர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரிப்பதுடன் இங்கு குடும்பப் பிரச்சினைகளும் சமூகப் பிரச்சினைகளும் கூடிக்கொண்டே போகின்றது.

கால்நடைகள் இரவு நேரங்களில் கள்வரால் திருடப்பட்டு கொலை செய்யப்பட்டு அவற்றின் இறைச்சியும் விற்பனவு செய்யப்படுகின்றது. அத்துடன் பனைமரங்களிலும், தென்னை மரங்களிலும் களவாக கள் இறக்கப்படுவதாக பாதிக்கப்பட்டவர்கள் புகார் தெரிவிக்கின்றார்கள்.

பொலிஸ் நிலையம் இல்லை

இப்பகுதியில் நிரந்தரமாக பொலிஸ் நிலையம் ஒன்றும் இல்லை. இதனால் பொது மக்கள் தங்கள் முறைப்பாடுகளை தெரிவிக்க நீண்ட தூரமுள்ள ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்கு கடலில் படகு மூலம் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது. இப்பகுதியிலே சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தை புனித பூமியாக மாற்றவேண்டிய சூழ்நிலையில் இவ்வாறான சமூக விரோதச் செயல்களை தொடர்ந்து இடம்பெற அனுமதிக்கலாமா? என்று இப்பகுதி பொதுமக்கள் புத்திஜீவிகள் கேள்வி எழுப்புகின்றனர்.

வாகன பாவனையாளர் தொகை கூடியது
விபத்துக்கள் தினமும் அதிகரிப்பு

தமிழ், சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டு யாழ். நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் தற்போது வியாபாரம் களை கட்ட ஆரம்பித்துள்ளது. இதனால் யாழ். நகரில் ஜன நெருக்கடியும் வாகன போக்கு வரத்துகளும் அதிகரித்துக் காணப்படுகின்றது. வர்த்தக ஊழியர்கள் விடுமுறை தினமான ஞாயிற்றுக்கிழமைகளிலும் புதுவருடத்தை யொட்டி வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என யாழ். வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை புதுவருட தினத்தை முன்னிட்டு நூற்றுக்கு மேற்பட்ட வெளியூர் நடைபாதை வியாபாரிகள் யாழ்.நகரை முற்றுகையிட்டனர். யாழ். நகரப் பகுதியில் நடைபாதை வியாபாரிகளுக்கென யாழ் முனீஸ்வரன் வீதியில் இடம் ஒதுக்கப்பட்ட போதும் அங்கு இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதை அடுத்து நடைபாதை வியாபாரிகள் யாழ். ஆஸ்பத்திரி வீதி ஓரங்களிலும் யாழ். மின்சார நிலைய வீதி ஓரங்களிலும் தங்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது இவ்வாறு இருக்க யாழ். நவீன சந்தை உட்புறப் பகுதியில் தனியார்துறை வர்த்தகர்களும் வெளிப்புறப் பகுதியில் உள்ள தனியார் துறை வர்த்தகர்களும் தங்கள் வியாபாரப் பொருட்களை நடை பாதையில் வைத்து வியாபாரம் செய்து வருவதால் மக்கள் போக்குவரத்துக்குப் பெரும் இடைஞ்சலாக இருப்பதாக கவலை தெரிவிக்கின்றார்கள்.

இது விடயம் பற்றிய யாழ். மாநகர சபை ஆணையாளர் முன்பு யாழ். நவீன சந்தைப்பகுதி வர்த்தகர்களுக்கு பல தடவை அறிவித்தும் வர்த்தகர்கள் இதை சரியாக நடைமுறைப்படுத்த முன்வருகின்றார்கள் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் யாழ். நகரில் ஒரே வழிப்பாதை நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் வாகன விபத்துக்கள் தற்போது குறைந்து காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஏ9 பாதை திறக்கப்பட்ட பின்பு யாழ். நகரில் வாகனம் பாவிப்போர்கள் தொகை பல மடங்காகப் பெருகியுள்ளது. இதனால் குடாநாட்டில் பல பாகங்களிலிருந்தும் வாகன விபத்துக்கள் அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. யாழ். போதனா

வைத்திய சாலையில் தினமும் ஐந்துக்கு மேற்பட்டோர் வாகன விபத்தில் சிக்குண்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதாக மேற்படி வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதுவருடத்தையொட்டி யாழ். நகரில் ஏற்பட்டுள்ள ஜன நெருக்கடியை முன்னிட்டு மேலதிக போக்குவரத்து பொலிஸார் வீதிகளில் கடமையாற்றுவதை காணக் கூடியதாகவுள்ளது.

யாழ்.கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் பல குறைபாடுகள் நிவர்த்தி செய்ய யாரும் முன்வருவதில்லையென பெற்றோர் விசனம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட கொட்டடி நமசிவாய வித்தியாலயம் பலதரப்பட்ட குறைபாடுகளுடன் நீண்ட நாட்களாக இயங்கி வருவது குறித்து மேற்படி பாடசாலைச் சமூகத்தினர் மற்றும் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து சம்பந்தப்பட்ட கல்வித் திணைக்கள அதிகாரிகளிடம் மேற்படி வித்தியாலய குறைபாடுகளை நிவர்த்தி செய்து உதவுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

அக்கோரிக்கையில் அவர்கள் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

இவ்வித்தியாலயத்தில் கல்வி கற்று வரும் மாணவர்களில் 90 சதவீதமானவர்கள் வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களது பெற்றோர்களில் அனேகமானவர்கள் கூலி வேலை செய்து வருபவர்கள். யுத்த

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வகுப்பு அறை கட்டடங்கள் இதுவரை புனரமைப்பு செய்யப்படவில்லை. தொழில் முன்னிலைப் பாடங்கள் கற்பித்தலுக்கான விசேட வகுப்பறைகள் இதுவரை புதிதாக நிர்மாணிக்கப்படவில்லை. சிறுவர் முற்றம் மற்றும் விளையாட்டு மைதானம் இன்மையால் மாணவர்கள் விளையாட்டுத் துறையில் ஆர்வம் இன்றிக் காணப்படுகின்றார்கள். இங்கு ஆரம்ப ஆசிரியர்கள் தட்டுப்பாடு நீண்டகாலமாக இருந்து வருகின்றது. அத்துடன் சித்திரம், நடனம் போன்ற அழகியல் பாடங்கள் கற்பிக்கவும் ஆசிரியர்கள் இல்லாது மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

மலசலகூடங்கள் பற்றாக்குறை

இங்குள்ள மலசலகூடங்கள் மாணவர்களுக்கு பற்றாக்குறையாக உள்ளது. வித்தியாலய அதிபர் அலுவலகத்துக்கு போதிய தளபாடங்கள் இல்லை. அத்துடன் தட்டெழுத்துப்பொறிகள், இரட்டிப்புப்பொறிகள் மற்றும் கணினிகள் இல்லாது உள்ளது. இவைகளை அனுப்பி உதவுமாறு மாவட்ட கல்வித்திணைக் களத்துக்கு பலமுறை அதிபரால் கோரிக்கை விடப்பட்ட போதும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவ்வித்தியாலயத்தில் பல தடவைகள் பெறுமதியான பொருட்கள் இரவு நேரங்களில் திருடப்பட்டுள்ளன. ஆகவே காவலாளி ஒருவர் கல்வித்திணைக்களத்தால் நியமிக்கப்படவில்லை. சுகாதார தொழிலாளி ஒருவர் நியமிக்கப்படாததால் பாடசாலை மலசலகூடங்கள் துப்பரவு செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வித்தியாலயத்தில் 501 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றார்கள். 25 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகின்றனர்.

பெற்றோர் கவலை

யாழ். நகர முன்னணி பாடசாலைகள் மீது மாவட்ட கல்வித் திணைக்களம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் காட்டும் அக்கறையும் ஆர்வமும் பின்தங்கிய சூழலில் வசித்துவரும் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் கல்வி கற்று வரும் பாடசாலைகளில் அக்கறை காட்டப்படுவதில்லை என பெற்றோர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வித்தியாலயத்தில் நூல் நிலையம் இருந்தும் இல்லாதது போல் இருக்கின்றது. மாணவர்களுக்குத் தேவையான நூல்கள் இந்த நூல் நிலையத்தில் இல்லை. பல புதிய நூல்களைக் கொள்வனவு செய்ய நிதி பற்றாக்குறையுமுள்ளது.

இங்குள்ள குடிநீர்க் குழாய்கள் பழுதடைந்துள்ளதால் மாணவர் குடிநீர் பெறுவதற்கு பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள். பாடசாலையில் நிலவி வரும் சிறு குறைபாடுகளைக்கூட நிவர்த்தி செய்வதற்கு நகரின் ஏனைய பாடசாலைகளுக்கு கிடைக்கும் பெற்றோரின் ஆதரவு இப் பாடசாலைக்குக் கிடைப்பதில்லை. ஆகவே இனியாவது சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தாமதியாது இப் பாடசாலையில் நிலவி வரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முன்வரவேண்டும்.

இவ்வித்தியாலயத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதில் தொகுதி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஆர்வம் காட்டாது

நகர பாடசாலைகளுக்கே பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கீடு செய்தும் மேற்படி பாடசாலைகளின் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டும் அவர்கள் அணிவிக்கும் மலர் மாலைகளுக்கு கழுத்தை நீட்டுவதே அவர்களின் செயலாக உள்ளது குறித்து பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றார்கள்.

ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் ஆளணி பற்றாக்குறை நோயாளர் அவதி

ஊர்காவற்றுறை அரசினர் பொது வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக ஆளணி பற்றாக்குறை நிலவி வருகின்றது. குறிப்பாக சிற்றூழியர்கள் மற்றும் மருத்துவமாது போன்றோர் பற்றாக்குறையால் மேற்படி வைத்தியசாலை நிர்வாகம் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு முறைப்பாடு தெரிவித்தும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி ஒருவரும் பல் வைத்திய டாக்டர் ஒருவரும் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்கள் விடுமுறையில் செல்வதனால் மாவட்ட சுகாதார திணைக்களத்துக்கு அறிவித்து பதில் டாக்டர் வந்தால் தான் விடுமுறையில் செல்ல முடியும். அதுவும் இரு நாட்களுக்குமேல் விடுமுறை எடுக்க முடியாதாம்.

இங்கு 6 வாட்டுகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இவற்றில் 9 ஆண் சிற்றூழியர்களும் 7 பெண் சிற்றூழியர்களும் கடமையாற்றி வருகின்றனர். அத்துடன் மருத்துவமாது ஒருவரும் 4 பெண் தாதிகளும் கடமையாற்றி வருகின்றனர்.

இவ்வைத்தியசாலைக்கு தனியான குடிநீர் குழாய் ஒன்று இதுவரை பொருத்தப்படவில்லை. இங்குள்ள குடிநீர் தாங்கிக்கு குடிநீர் நிரப்ப முடியாதநிலை இருப்பதனால் வெளியில் உள்ள குடிநீர் குழாய் மூலம் குடிநீர் பெறப்பட்டு வருகின்றது. இதனால் சிலவேளைகளில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்படுகின்றது. இங்குள்ள வைத்திய அதிகாரி டாக்டர் கனகரத்தினம் தினமும் 24 மணி நேரம் கடமையாற்றி வருகின்றார். ஆகவே மேலதிக டாக்டர் ஒருவரை இங்கு நியமிக்குமாறு இப்பகுதி மக்கள் யாழ். மாவட்ட சுகாதார திணைக்கள அதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

வைத்தியசாலை புனரமைப்பில் அசமந்தம் மண்டைதீவு மக்கள் பெரும் விசனம்

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மண்டைதீவு அரசினர் பொது வைத்தியசாலையை புனரமைத்து மீண்டும் இயங்கவைப்பதில் ஆர்வமும் அக்கறையும் காட்டாது யாழ். பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் காலத்தை கடத்தி வருவதாக இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சகல வசதிகளும் கொண்டதாக இவ்வைத்தியசாலையை புனரமைப்பதற்கு நிக்கொட் நிறுவனம் 90 இலட்சம் ரூபா ஒதுக்கி கட்டிட ஒப்பந்தக் காரரிடம் விண்ணப்பங்களை கோரியபோது எவரும் கட்டிட புனரமைப்பு பணிகளுக்கு விண்ணப்பிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

புனரமைப்பு பணிகளுக்கு எவரும் விண்ணப்பிக்க முன்வராத பட்சத்தில் மேற்படி திணைக்கள பணிப்பாளர் மாற்று நடவடிக்கை ஏதாவது எடுக்க முன்வரவேண்டும். அதைவிடுத்து இவ்வைத்தியசாலைப் புனரமைப்பு விடயத்தில் மௌனம் சாதிப்பது குறித்து மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இதனால் இப்பகுதி கர்ப்பிணித் தாய்மார்கள் தங்கள் மகப்பேற்றுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே மேற்படி வைத்தியசாலை புனரமைப்பு பணியின் அசமந்தப் போக்கை கைவிட்டு மாற்று வழியை கடைப்பிடித்து உடன் வைத்தியசாலை கட்டிடங்களை புனரமைத்து மீண்டும் வைத்தியசாலையை ஆரம்பிக்க சம்பந்தப்பட்ட திணைக்களம் முன்வரவேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

யாழ். குடாவில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு இயல்பு வாழ்க்கை திரும்பாத நிலையில் மக்கள் அவதி

யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட அனைத்துப் பொருட்களின் விலையும் தற்போது அதிகரித்துள்ளது.

இதனால் இங்குள்ள மக்கள் வாழ்க்கை செலவை சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். இந்த விலை அதிகரிப்பு

பணக்கார வர்க்கத்தை பாதிக்காவிட்டாலும் அன்றாடம் உழைத்து சீவியம் நடத்திவரும் ஏழைக்குடும்பங்களை பெரிதும் பாதித்துள்ளது.

அரசு புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னும் இயல்பு வாழ்க்கை மக்களிடம் தோன்றவில்லை.

மக்கள் பொது இடங்களிலும் உறவினர் வீடுகளிலும் அடிப்படை வசதிகள் இன்றி பலவித கஷ்டங்களுக்கு வாழ்ந்து மத்தியில் வருகின்றனர்.

மேலும் மண்டைதீவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது கடல்நீர் மக்கள் குடியிருப்பு பகுதிகளுக்கு செல்லாதவாறு அமைக்கப்பட்ட பாரிய அணைக்கட்டுகள் அனைத்தும் உடைந்து உருக்குலைந்து போயுள்ளன.

இதனால் கடல்நீர் குடியிருப்பு பகுதிகளுக்குள் புகுந்து இங்குள்ள குடிநீர் கிணறுகளை உவர் தன்மையாக மாற்றியதோடு விவசாய நிலங்களையும் உவர் தரையாக மாற்றியுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் மேற்படி விவசாய காணிகளில் எவ்வித உப உணவு பயிர்களும் பயிரிடமுடியாத நிலை ஏற்பட்டதோடு நெற்செய்கையிலும் விவசாயிகள் ஈடுபட முடியாத நிலை தோன்றியுள்ளது. ஆகவே வேலணை கமநல சேவைத் திணைக்களம் இவ்விடயத்தில் அக்கறை எடுத்து மேற்படி அணைக்கட்டுக்களை மீளமைத்து இப்பகுதி விவசாயிகளுக்கு கை கொடுத்து உதவவேண்டும். இப்பகுதி விவசாயிகள் அநேகம் பேர் 1990ஆம் ஆண்டு இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ

நடவடிக்கைக்கு பின்பு தமது விவசாய நடவடிக்கைகளை கைவிட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

குடியிருப்புகளை இழந்த தீவகப்பகுதி அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடும் புறக்கணிப்பு

தீவுப்பகுதிகளில் இராணுவ நடவடிக்கையின் போது வீடுகளை முற்றாக இழந்த தீவக அரச ஊழியர்கள் தமது வீடுகளை மீண்டும் புதிதாக நிர்மாணிப்பதற்கு நஷ்டஈடு கோரித் தாங்கள் கடமையாற்றும் திணைக்கள அதிகாரிகள் ஊடாக புனர்வாழ்வு மீள்குடியேற்ற அமைச்சுக்கு விண்ணப்பித்து நீண்ட காலமாகியும் இதுவரை தமக்கு எவ்வித நஷ்டஈடும் வழங்கப்படாது தாம் புறக்கணிக்கப்பட்டு வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

இது விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எதுவித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை என்றும் தமக்கு உதவ எவரும் முன்வரவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். வீடுகளை இழந்த அரச ஊழியர்கள் தாம் குடியிருப்பதற்கு வீடுகளை தேடி அலைந்து திரிகின்றார்கள். இதனால் இப்பகுதியில் ஒரு வீட்டில் இரண்டு மூன்று குடும்பங்கள் பல அடிப்படை வசதியின்றி வசித்து வருகின்றன.

இது குறித்து பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு உடன் நஷ்ட ஈட்டை வழங்கி உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பல தடவை கோரியும் இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை.

ஆகவே இனியும் தாமதியாது தங்களது நஷ்ட ஈட்டுத் தொகையை உடன் வழங்கி நடவடிக்கை எடுக்குமாறு தீவக அரச ஊழியர்கள் வேலணை பிரதேச செயலரிடம் கோரி வருகின்றார்கள்.

மண்டைதீவில் பூட்டப்பட்டிருக்கும் சைவ ஆலயங்கள் மீண்டும் திறக்கப்பட வேண்டும் திருமுறைக்கழகம் கோரிக்கை

மண்டைதீவுப் பகுதியில் பூஜை வழிபாடுகள் இன்றி பூட்டப்பட்டிருக்கும் சைவ ஆலயங்கள் அனைத்தும் உடன் புனரமைக்கப்பட்டு மீண்டும் திறந்து பூஜை வழிபாடுகளை நடத்த மேற்படி ஆலய உரிமையாளர்கள், பரிபாலன சபையினர் முன்வரவேண்டும் என்று மண்டை தீவு திருமுறைக்கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இப்பகுதியில் பல சைவ ஆலயங்கள் இருந்தும் ஒரு சில சைவ ஆலயங்கள் மட்டும் மீண்டும் திறந்து நித்திய பூஜை வழிபாடுகளை நடத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்து கலாசார அமைச்சர் யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சைவ ஆலயங்களை மீண்டும் புனரமைக்க பணம் ஒதுக்கிக் கொடுப்பாரா? யுத்த அனர்த்தங்களால் பெரும் பாதிப்புக்குள்ளான ஆலயங்களின் சேத விபரங்களைக் கணக்கிட்டு அதற்குரிய நஷ்டஈட்டை அமைச்சர் அரசிடமிருந்து பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும்.

அதோடு அமைச்சர் தனக்கு கிடைத்த அமைச்சர் பதவியைக் கொண்டு மக்களுக்காகவும் தனது மண்ணின் அபிவிருத்திக்காகவும் கடினமாக உழைக்கவேண்டும். அப்படி அவர் முன்வருவாரானால் மக்கள் உள்ளங்களில் என்றும் மக்கள் தொண்டனாக மிளிருவார். இல்லையேல் அவரது பதவியும் அவரது காலத்தோடு மறைந்துவிடும்.

ஆகவே இந்து கலாசார அமைச்சின் சேவைகள், தொண்டுகள் என்றும் காலத்தால் அழியாது நிலைத்து நிற்கவேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும்.

வேலணை வைத்தியசாலையில் பிற்பகலில் டாக்டர் இன்மையால் நோயாளர் அவதி

வேலணை அரசினர் பொது வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

தற்போது மேற்படி வைத்தியசாலையில் அதிகாரியாகக் கடமையாற்றிவரும் டாக்டர் இராசையா பிற்பகல் 1 மணிக்கு பின்பு புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு கடமைக்கு செல்வதால் பிற்பகல் இவ்வைத்தியசாலை இயங்காது உள்ளது.

இதனால் பல நோயாளர்கள் பிற்பகல் வேளைகளில் டாக்டர் இல்லாது திரும்பி செல்கின்றனர். இதேவேளை வேலணை அரசினர் பொது வைத்தியசாலைக்கு தகுதி வாய்ந்த டாக்டரை நியமிக்குமாறு பல தடவை யாழ். மாவட்ட சுகாதார

திணைக்களத்தின் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். தீவுப்பகுதியில் உள்ள அரசினர் பொது வைத்தியசாலைகளில் அனேகமாக அப்போதிக்கரிதரத்திலான டாக்டர்களே கடமையாற்றி வருகின்றனர். அதுவும் சேவை நீடிப்பு பெற்ற வயோதிபர்கள் கடமையாற்றி வருகின்றார்கள்.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் தங்கள் மருத்துவ கல்வியை முடித்துக்கொண்டு வெளியேறும் எம்.பி.பி.எஸ் தரத்திலான டாக்டர்களை வேறு இடத்திற்கு டாக்டராக நியமிக்காது தீவுப்பகுதி வைத்தியசாலைகளுக்கு நியமிக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

சிறு சத்திர சிகிச்சை கூட தீவுப்பகுதி நோயாளர்கள் பல மைல் தூரம் பிரயாணம் செய்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் அதிக பணம் செலவழித்து வீண் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவ்விடயத்தில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்கறை எடுத்து தீவுப்பகுதி அரசினர் பொது வைத்தியசாலைகளில் எம்.பி.பி.எஸ். தரத்திலான டாக்டர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

யாழ் மாவட்டத்தில்
தொலைபேசி இணைப்பு வழங்குவதில்
ரெலிகொம் நிறுவனம் இழுத்தடிப்பு

யாழ். ரெலிகொம் நிறுவனத்தில் புதிதாக தொலைபேசி இணைப்பு கோரி நீண்ட காலமாகியும் சிலருக்கு இதுவரை மேற்படி நிறுவனம் தொலைபேசி இணைப்பு வழங்காது இழுத்தடித்து வருகின்றது. இது பற்றி மக்கள் சம்பந்தப்பட்ட நிறுவன உயர் அதிகாரிகளிடம் நேரடியாக சென்று கேட்ட போது கொழும்பில் இருந்து உபகரணங்கள் வந்ததும் இணைப்பு தருவதாக கூறி அவர்களை அனுப்பி விடுகின்றனர்.

சிலர் வருடக் கணக்காக யாழ். ரெலிகொம் நிறுவனத்துக்கு அலைந்து திரிவதாக கவலை தெரிவிக்கின்றார்கள். இது பற்றி யாரிடம் முறையிடுவது என்று தெரியாமல் மக்கள் திண்டாடுகிறார்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு, அரசின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைத் தொடர்பு திணைக்களத்தை தனியார் நிறுவனமாக்கியது. இதனால் மேற்படி நிறுவனம் தொலைத்தொடர்பு இணைப்புக்கு பெரும் தொகை பணத்தை மக்களிடமிருந்து அறவிடுவதோடு சுயநலத்துடனும் செயற்பட்டு வருகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

தனியார் நிறுவனமாக்கப்பட்ட மேற்படி நிறுவனத்தில் இடம்பெறும் ஊழல்கள் குறித்து மக்கள் யாரிடம் முறையிடுவது எனத் தெரியாமல் தவிக்கின்றனர்.

ஆகவே தனியார் மயமாக்கப்பட்ட தொலைத்தொடர்பு நிறுவனத்தை அரசு உடைமையாக மீண்டும் மாற்றினால் மட்டுமே மக்களுக்கு உபயோகமாகவும் நன்மை அளிப்பதாகவும் முடியும்.

தனியார் நிறுவனம் என்ற காரணத்தால் மேற்படி நிறுவனம் பணத்தை அடிப்படையாக வைத்து செயற்பட்டு வருகின்றது.

பணவசதி படைத்தவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் லஞ்சம் கொடுப்பவர்களுக்கும் விசேட சலுகை அடிப்படையில் உடனுக்குடன் தொலைபேசி இணைப்புக்களை வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏனையோர் அவர்கள் கூறும் காரணங்களைக் கேட்டுக்கொண்டு ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியதுதான். எனவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இது விடயத்தில் கவனம் எடுத்து உடன் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடைக்கு கடை வேறுபடும் பொருட்களின் விலைகள் நடவடிக்கை எடுக்க கோருகின்றனர் பாவனையாளர்கள்

யாழ். குடாநாட்டிலுள்ள வர்த்தக நிலையங்களில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட அனைத்து பொருட்களின் விலைகள் கடைக்கு கடை வித்தியாசப்படுவதாக பாவனையாளர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்களுக்கு முன்பு பொருட்களின் விலைப்பட்டியல்

போடப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்திரிகை ஊடாக அறிவித்து இருந்தும் அநேக வர்த்தகர்கள் இன்னும் இதை கடைப்பிடிக்கவில்லை.

யாழ். குடாநாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து பொருட்களின் விலையை நிர்ணயம் செய்து பத்திரிகை மூலம் அறிவித்தால் பாவனையாளர்கள் நன்மை அடைவதோடு வர்த்தகர்கள் கொள்ளை லாபம் அடிப்பதையும் தடுக்க முடியும். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுப்பார்களா?

யாழ். குடாநாட்டில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்பட்டிருக்கும். ஆனால் கிராமப் புறங்களில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்கள் சில திறந்திருக்கும். இவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் பொருட்களின் விலையை அதிகரித்து விற்பனை செய்து வருகின்றார்கள்.

குறிப்பாக திருநெல்வேலி பகுதியில் உள்ள அனேக தனியார் வர்த்தக நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்திருக்கின்றன. இந்த வர்த்தகர்கள் பொருட்களின் விலையைக் கூட்டி விற்பனவு செய்து வருகின்றார்கள் என்று பாவனையாளர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றார்கள்.

ஞாயிற்றுக்கிழமை திறந்து வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் மீது நல்லூர் வணிகர் கழகம் நடவடிக்கை எடுத்து அவர்களையும் பூட்ட செய்யவேண்டும். இல்லையேல் அவர்கள் கொள்ளை இலாபம் அடிப்பதற்கு இடம் கொடுப்பதாக முடியும். எனவே சட்டத்தை நல்ல முறையில் அமுல்படுத்துமாறு நல்லூர் வணிகர் கழகத்தை பாவனையாளர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

பண்ணைப்பால திருத்த வேலை சனியன்று ஆரம்பம் வாகனப் போக்குவரத்து இடைநிறுத்தம்

யாழ். பண்ணைப்பாலம் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப் படவுள்ளதால் யாழ். நகரில் இருந்து தீவுப்பகுதிகளுக்கான போக்குவரத்து எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது.

இதற்கு பதிலாக யாழ். பண்ணையில் இருந்து மண்டைதீவு சந்தி வரை இலவச படகு சேவை நடைபெறவுள்ளது என யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை நிறைவேற்று பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் படகு சேவையில் பொருட்கள் ஏற்றி இறக்கும் பணிகளுக்கு மட்டும் பிரயாணிகளிடம் கட்டணம் அறவிடப்படும்.

பிரயாணிகள் மண்டைதீவுச் சந்தியில் இருந்து தொடர்ந்து இ.போ.ச. பஸ் வண்டிகளிலும் தனியார் பஸ் வண்டிகளிலும் தங்கள் பிரயாணங்களை தொடர்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்குறிப்பிட்ட இருவார காலப் பகுதிகளில் தென்னிலங்கைப் பகுதியில் இருந்து யாழ் நகருக்கு சுற்றுலாவை மேற்கொண்டு வரும் பயணிகள் தங்கள் பயணத்தை இயன்ற வரை தவிர்த்துக் கொள்ளுமாறும் யாழ் பண்ணையிலிருந்து மண்டைதீவுச் சந்தி வரை யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாஜம் இலவசமாக படகு சேவையை நடத்துவதற்கு முன் வந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை இது தொடர்பான

கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் கே.கணேஷ் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் வி.சுதாகர் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாஜத் தலைவர் எம். நவரட்ணம் இராணுவ அதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தீவுப்பகுதிகளில் தொடர் மழையால் கடல் பெருக்கு; மக்கள் இடம்பெயர்வு

மண்டைதீவுப் பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் பருவ மழை காரணமாக கடல் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியில் உள்ள தாழ்ந்த பிரதேசங்களில் வசித்து வந்த குடும்பங்கள் வேறு இடங்களுக்கு பாதுகாப்புத்தேடி சென்றுள்ளதாகக் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யாழ்ப்பாணச் சந்தியிலிருந்து மண்டைதீவு செல்லும் பிரதான வீதியில் கடல்நீர் ஓர் அடிக்கு மேல் பாய்ந்து வருவதால் மேற்படி வீதியால் போக்குவரத்து செய்யும் பாதசாரிகளும் வாகனங்களும் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

அத்தோடு யாழ். பண்ணைப் பாலத்தை அண்டிய பகுதிகளிலும் கடல் பெருக்கு ஏற்பட்டு ஊர்காவற்றுறை பிரதான வீதியில் கடல் நீர் மேவிப் பாய்ந்து வருவதால் பயணிகள் சேவையில் ஈடுபட்டு வரும் இ.போ.ச. பஸ்கள் மற்றும் தனியார்துறை வாகனங்கள் போக்குவரத்து செய்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டு வருவதாக தனியார் வாகனச்சாரதி ஒருவர் கவலை தெரிவித்தார்.

யுத்த அனர்த்தங்களால் இப்பகுதியில் உள்ள கடல்நீர்த்தடுப்பு அணைக் கட்டுக்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு உருக்குலைந்து போய்க் காணப்படுகின்றன.

இதனால் இங்குள்ள விளை நிலங்களில் கடல் நீர் சென்று நிறைந்து நிற்பதால் இங்குள்ள விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபட முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. அதே நேரம் இங்குள்ள குடிநீர்க்கிணறுகள் உவர்த் தன்மை அடைந்து இங்கு குடிநீர் தட்டுப்பாடும் தொடர்கின்றது.

இதனால் உடைந்து உருக்குலைந்து போன கடல்நீர் தடுப்பு அணைகளை மீண்டும் புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப் பட்ட திணைக்களத்துக்கு பல தடவை முறைப்பாடு செய்தும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் இது விடயத்தில் அக்கறை எடுக்காது இருந்து வருவது குறித்து மக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவிக்கின்றனர்.

வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே ஊர்காவற்றுறை பிரதேச சபையின் படகுச்சேவை

ஊர்காவற்றுறை பிரதேச சபையினரால் நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு ஆகிய தீவுகளுக்கிடையில் நடத்தப்படும் தேவரதம் படகுச் சேவை வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப் படுகின்றது. ஏனைய தினங்களில் மேற்படி தீவுகளுக்கு தனியார் படகு சேவை ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் இறங்கு துறையிலிருந்து சேவையில் ஈடுபடவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல்

அண்மையில் ஊர்காவற்றுறை பிரதேசசபை அலுவலகத்தில் சபை செயலாளர் ஏ.கணேசானந்தராஜா தலைமையில் நடைபெற்றது.

இதில் படகு உரிமையாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலை அடுத்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்டை தீவு எப்பொழுது வழமைக்குத் திரும்பும்?

கடந்த 1990ஆம் ஆண்டு தீவுப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக மண்டைதீவு பகுதியில் பெரும் தொகையான குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். இவர்கள் மண்டைதீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வன்னியிலும் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வசித்து வருகின்றார்கள்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிறகு தங்கள் சொந்த இடமான மண்டைதீவுப் பகுதிக்குச் சென்று வாழ்வதற்கு அவர்கள் வழியற்றிருக்கின்றனர். அவர்களது வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன. குறிப்பாக கரையோரப்பகுதிகளை சேர்ந்த மீனவ குடும்பங்களின் வீடுகளே பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன.

இத்தகைய குடும்பங்களுக்கு அரசாங்கம் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்க முன்வரவேண்டும். அல்லது யாழ் குடா நாட்டில் இயங்கிக் கொண்டிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்கள், மண்டைதீவு பகுதியில்

ஏனைய இடங்களைப் போல் பல வீடமைப்பு திட்டங்களை உருவாக்கி ஏழை மக்களுக்கு கை கொடுக்க முன் வரவேண்டும்.

யாழ் குடா நாட்டுக்கு வரும் அரச திணைக்கள உயரதிகாரிகள் அமைச்சர்கள் தீவுப்பகுதிகளுக்கு எட்டிப் பார்ப்பதில்லை. குறிப்பாக தீவுப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் மண்டைதீவு கிராமத்துக்கு ஏற்பட்ட பேரழிவு வேறு எந்த தீவுக்கும் ஏற்படவில்லை.

அப்படிப்பட்ட மண்டைதீவுப் பகுதிக்கு இது வரை எந்த மந்திரியும் வந்து எட்டிப் பார்க்கவில்லை. அரசியல்வாதிகள் இந்தக் கிராமத்தை பொறுத்தவரையில் ஏனோதானோ என்ற நிலையில் தான் செயல்படுகின்றனர். தேர்தல் காலங்களில் மட்டும் தங்கள் தலையைக் காட்டும் அரசியல்வாதிகள் இக்கிராமத்தின் அபிவிருத்தியில் அக்கறை காட்டாது இருப்பது ஏன் என்று இப்பகுதி மக்கள் கேட்கின்றார்கள்.

யாழ் நகரில் இருந்து 6 1/2 கிலோ தொலைவில் உள்ள மண்டைதீவு கிராமம் எப்போது வழமை நிலைக்கு திரும்பும்? அந்த நிலையை ஏற்படுத்துவது யார்? சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்த இந்தக் கிராமத்தில் இன்று குறிப்பிட்ட சிறு தொகை குடும்பங்களே அடிப்படை வசதிகள் இன்றி வசித்து வருகின்றன. மண்டைதீவு கிராமம் எப்போது வழமைக்குத் திரும்புவது?

ப.நோ.கூ.சங்கங்கள், தனியார் வர்த்தக நிலையங்களிடையே போட்டி நிலை

மக்களுக்குக் குறைந்த விலையில் பொருட்களை விற்பனவு செய்வதற்கென ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமே ப.நோ.கூ. சங்கங்களாகும். ஆனால் இந்த சங்கங்கள் இன்று தனியார் துறை வர்த்தக நிலையங்களுடன் போட்டி போடமுடியாமல் திண்டாடுகின்றன.

இதேவேளை சில கூட்டுறவு சங்கக் கிளைகளில் தனியார் விற்பனவு நிலையங்களிலும் பார்க்க கூடுதல் விலையில் பொருட்கள் விற்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கிறார்கள்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உலர் உணவு நிவாரணம் வழங்கும் நாட்களில் மட்டும் ஜனக்கூட்டம் அதிகமாகக் காணப்படும். ஏனைய நாட்களில் கூட்டுறவுச் சங்க முகாமையாளரையும் விற்பனையாளர்களையும் தவிர வேறு ஒருவரையும் அங்கு காணமுடிவதில்லை.

இதேவேளை திருநெல்வேலி கலாசாலை வீதியில் உள்ள தனியார் விற்பனை நிலையத்தில் தினசரி பொதுமக்கள் பெரும் திரளாக சென்று அங்கு நியாய விலையில் தேவையான பொருட்களைப் பெற்றுச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

கொக்குவில், கல்வியங்காடு, நல்லூர் போன்ற இடங்களில் இருந்தும் மக்கள் இவ் விற்பனவு நிலையத்திற்கு பொருட்களை கொள்முதல் செய்ய வருவதைக் காணக்கூடியதாகவும் உள்ளது.

இங்கு புகையிலை தொடக்கம் சகல பொருட்களும் நியாய விலையில் விற்கப்படுவதே இதற்குரிய காரணமாகும்.

இராணுவத்தினரும் தங்கள் "டிரக்" வண்டிகளில் அடிக்கடி வந்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்வதையும் காணமுடிகின்றது.

ஒரு புறம் அழிப்பு, மறுபுறம் நடுகை! அழிப்புக்கு அமைச்சர் ஏன் குரல் கொடுக்கவில்லை?

யாழ். குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளின் போது லட்சக் கணக்கில் பனைகள் அழிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருகின்றன.

பனைவளங்கள் நிரம்பப் பெற்ற தீவுப்பகுதிகள் வடமராட்சி மற்றும் வலிகாமம் ஆகிய இடங்களில் உள்ள அனேக குடும்பங்கள் பனை மூலம் கிடைக்கும் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தி அதன் மூலம் தங்கள் வாழ்க்கை சீவியத்தை நடத்தி வந்தனர்.

அவர்கள் இந்த பனை அழிப்பால் எந்தவித வருமானமும் இன்றி தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் கஷ்டப்படு கின்றார்கள். பசி பட்டினியை எதிர்நோக்குகின்றார்கள்.

பனம் தோப்புக்களுக்கு சொந்தக்காரர்கள் தங்கள் இழப்புக்களை கணக்கீடு செய்து அதற்கேற்ற நஷ்ட ஈட்டை அரசாங்கம் தமக்கு தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது இவ்வாறு இருக்க பனை வளத்தை அபிவிருத்தி செய்வதற்கென அரசு பனை அபிவிருத்திச்சபை ஒன்றை அமைத்து செயற் படுத்திவருகின்றது.

இச்சபை பனை விதைகளை குடாநாட்டின் பல பகுதிகளில் நாட்டி பனை அபிவிருத்திப் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இது ஒரு புறம். மறு புறம் அரசின் பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு அரண்கள் அமைப்பதற்காக பயன்தரு பனை மரங்களை அநியாயமாக அழித்து வருகின்றனர்.

இந்து காலாசார அமைச்சர் இந்த மண்ணின் மைந்தன் ஆவார். அவரது அமைச்சின் கீழ் பனை அபிவிருத்திச் சபையும் இயங்கி வருகின்றது. அவருக்கு இந்த அநியாய பனை அழிப்புகளைப் பற்றி தெரியாதா? அவர் இது பற்றி பாராளுமன்றத்தில் இதுவரை ஏன் குரல் எழுப்ப வில்லை என்று யாழ். குடாநாட்டு மக்கள் கேட்கின்றார்கள். இனியாவது பனைகளை இழந்து வருமானம் இன்றி தவிக்கும் குடும்பங்களுக்கு அவரவர் இழப்புக்கு தகுந்தபடி நஷ்டஈட்டை அரசிடம் அவர் பெற்றுக்கொடுக்க முன்வருவாரா? என்றும் யாழ் குடாநாட்டு மக்கள் கேட்கின்றனர்.

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலை குறைபாடுகளைத் தீர்க்குமாறு வேண்டுகோள்

நெடுந்தீவு அரசினர் பொது வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக நிலவி வரும் பல தரப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து உதவுமாறு இப்பகுதி மக்கள் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக பலதடவை பத்திரிகை வாயிலாகவும் நேரடியாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு தெரிவித்தும் அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்காதது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இதேவேளை நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு நெடுந்தீவு அரசினர் பொது வைத்தியசாலையில் நிலவி வரும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி அதை நிவர்த்தி செய்து உதவுமாறு அண்மையில் கடிதம் மூலம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது :-

நெடுந்தீவு அரசினர் பொது வைத்தியசாலையில் அண்மையில் இடம்பெற்ற பிரசவம் ஒன்றின் போது குழந்தை இறந்ததை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். இது தொடர்பாக வைத்தியசாலை அதிகாரியுடன் கலந்துரையாடியபோது வெளிச்சமின்றி அரிக்கன் லாம்பு வெளிச்சத்திலேயே பிரசவம் நடைபெற்றதாவும் குழந்தைக்கு வழங்க ஒட்சிசனும் வைத்தியசாலையில் இருக்கவில்லை என்றும் ஒட்சிசன் இருந்திருந்தால் குழந்தையைக் காப்பாற்ற முயற்சித்திருக்கலாம் என்றும் கூறினார்.

மேலும் இக்குழந்தை பிரசவ திகதிக்கு முன்னர் பிறந்தமையாலேயே இறப்பு ஏற்பட்டதாகவும் எனினும் போதிய வசதிகள் இருந்திருந்தால் குழந்தையைக் காப்பாற்ற முயற்சித்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும் வைத்தியசாலையில் போதிய ஆண், பெண் தாதிகள் மற்றும்

மருந்தாளர்கள் போன்றவர்களும் இங்கு இல்லை. இதனால் மேற்படி வைத்தியசாலையை முற்றும் முழுதாக செயற்படுத்த முடியாத நிலையில் உள்ளது. வைத்தியசாலைக்கு தேவையான மருந்து வகைகளும் கையிருப்பில் இல்லை என்றும் கூறப்பட்டது. அத்துடன் வைத்தியசாலைக்கு சூரிய மின்கலங்களை வழங்கி அதன் மூலம் மின்சாரம் பெற வசதிகள் பெறுவதற்கும் மற்றும் தேவையான மருந்து வகைகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்து இவ்வைத்தியசாலை எதிர்காலத்தில் எதுவித குறைபாடுகள் இன்றி முழுமையாக செயற்படுத்த ஆவன செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இணுவில் இந்துக்கல்லூரி குறைபாடுகள் விரைவில் நிவர்த்தி செய்யப்படுமா? பெற்றோர் மத்தியில் விசனம்

இணுவில் இந்துக் கல்லூரியில் பலதரப்பட்ட குறைபாடுகள் இருந்தும் வலயக் கல்வித்திணைக்களமோ மாவட்டக் கல்வித் திணைக்களமோ இதுவரை அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்காதது குறித்து பெற்றோர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப் படுகிறது.

மேற்படி கல்லூரியில் ஆரம்பக்கல்வி கற்பிப்பதற்கு நீண்ட காலமாக ஆசிரியர்கள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. ஒன்பது பேர் கடமையாற்ற வேண்டிய இப்பிரிவில் தற்போது மூன்று பேர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர். இதனால் பாடங்களை ஒழுங்காக நடத்த முடியாத நிலையில் மாணவர்களின் வரவும் குறைவடைகின்றது.

இதேவேளை தொண்டர் ஆசிரியர்களை நியமிக்க வேண்டாம் என கல்வித் திணைக்களம் அதிபர்களை வற்புறுத்துகிறது. ஆனால் ஆசிரியர்கள் நிரப்பும் விடயத்தில் இக்கல்லூரியை கல்வித் திணைக்களம் பராமுகமாக இருந்து வருகின்றது.

இக்கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களில் 75 வீதமானவர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள மாணவர்கள். இங்கு தேவையற்ற பாடங்களுக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றார்கள். அவர்களில் குறிப்பிட்ட ஒரு சிலர் நோயாளிகளாகவும் காணப்படு கின்றார்கள். இதனால் உரிய முறையில் உரிய வகுப்புகளுக்கு ஆசிரியர்கள் தகுதியில்லாமையாலும் கல்வி செயற்பாடு மிகவும் பின் அடைந்து காணப்படுகின்றது.

குறிப்பாக க.பொ.த.உயர்தர வகுப்புக்கு புவியியல் பாட ஆசிரியர் இன்றி மாணவர்கள் சிரமப்படுகின்றனர். இது பற்றி வலயக் கல்வித் திணைக்களத்துக்கு பலமுறை அறிவித்தும் இதுவரை ஒருவரையும் நியமிக்கவில்லை. அத்துடன் மாணவர்களுக்கும் போதிய தளபாடங்கள் இல்லை. இதனால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கு கின்றார்கள். இங்குள்ள பழைய கட்டிடம் ஒன்றும் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. அதை உடன் திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட வர்களிடம் கல்லூரி நிர்வாகம் கோரியும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

மேலும் இப்பாடசாலைகளில் மலசல கூடங்கள் சுத்தம் செய்வதற்கு மலசலகூடத் தொழிலாளி ஒருவர் கூட இல்லை. இதனால் மாணவர்களே மலசலகூடங்களைத் துப்பரவு செய்து வருகின்றார்கள். இதற்கு பெற்றோர் தரப்பில் கடும் எதிர்ப்பு நிலவுகின்றது.

எனவே இனிமேலாவது வலயக் கல்விப் பணிப்பாளர் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஆகியோர்கள் இப்பாடசாலையில் நிலவி வரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்துக் கொடுப்பார்களா? என்று பெற்றோர் மத்தியில் கேள்வி எழுப்பப்படுகின்றது.

சுனாமியின் கோரத்தாண்டவத்தில்

எனது குடும்பத்தினர் ஐவரை சடலமாகக் கண்டேன்

மணற்காடு கத்தோலிக்க பாடசாலை மாணவன் ரெஜினோல் (வயது 17) கூறுகின்றான்.

"எனது தந்தை, தாயார், சகோதரிகள், சகோதரன் ஆகிய 5 உறுப்பினர்கள் சுனாமி கடல் கொந்தளிப்பில் அகப்பட்டு இறந்து விட்டனர். சம்பவதினம் காலை மணற்காடு பெருக்கெடுத்துள்ளது என கூறிய தந்தை அதைப் பார்க்க கடற்கரைக்கு சென்று விட்டார். அக்காவும் இரண்டு சகோதரியும் ஒரு சகோதரனும் வீட்டில் இருந்தனர். நானும் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் வீட்டுக்கு முன்பாக உள்ள வீதியில் நின்றோம். எங்கள் வீட்டுக்கும் கடற்கரைக்கும் 500 மீற்றர் தூரம் இருக்கும். கடல் வருகுது என்று கத்திக்கொண்டு அங்குள்ள சவக்காலை மணல்பிட்டிக்கு வந்து விட்டோம். ஏனைய மக்கள் சிலரும் எங்களுடன் வந்து இருந்தனர். பின்பு இந்த முகாமுக்கு வந்து விட்டோம். எனது தந்தையார் தாயார் சகோதரர் மற்றும் சகோதரிகள் எங்கள் வீட்டுக்கு அண்மையில் இறந்து கிடந்ததைப் பார்த்தேன்.

மணற்காட்டைச் சேர்ந்த திருமதி அடைக்கலம் ஜோர்ச் (வயது 38) தெரிவித்ததாவது :

"எனது கணவர் வழமைபோல் அன்றும் கடற்தொழிலுக்கு சென்று இருந்தார். அன்று காலை 9.30 மணிக்கு மணற்காட்டில் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. நான் எனது கணவனைத் தேடிக் கடற்கரைக்குச் சென்றேன். அங்குள்ள மக்கள் கடல் வருகுது ஓடுங்கோ என்று கூறிக்கொண்டு ஓடினார்கள். நானும் உடனே வீடு திரும்பி பிள்ளைகளுடன் ஓடி மணற்திட்டி ஒன்றில் ஏறி நின்று தப்பி விட்டோம். மறுநாள் எனது கணவர் இறந்து விட்டார் என்று அறிந்தேன்" என்றார்.

மணற்காட்டை சேர்ந்த கந்தசாமி பன்னீர்ச் செல்வம் (வயது 39) கூறுகையில் :

"சம்பவதினம் எனது வீட்டுக்கு அருகில் உள்ள கடலில் வெடிச்சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து புகை மண்டலமாக கடல் காணப்பட்டது. இதை எனது மனைவியிடம் கூப்பிட்டுக் காட்டினேன். அப்போது எனது மனைவி எனது கடைசி மகனுக்கும் அவனது தாயாருக்கும் சாப்பாடு கொடுத்துக்கொண்டிருந்தாள். நாங்கள் அனைவரும் மேட்டுப் பகுதிக்குள் ஓடிச் சென்றோம். ஆனால் எனது மனைவி, மாமி, எனது 2 மகன்கள் எனது கடைசி மகள் யுனாரா வயது 5 ஆகிய நான்கு பேரும் கடல் அலையால் இறந்து விட்டனர். நான் மரத்தில் ஏறி தப்பி விட்டேன். தற்போது என்னுடன் மூத்தமகன் மட்டும் முகாமில் உள்ளார்" என்று விரக்தியுடன் கூறினார்.

தும்பளை கிழக்கு பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி ஜேஸ்மன் செல்வராணி (வயது 23) கூறுகையில் :

"சம்பவதினம் காலை சாப்பாட்டை முடித்துவிட்டு எனது ஒன்றரை வயது குழந்தைக்கு பால் ஊட்டிக்கொண்டு இருந்தேன். அப்போது கடல் அலை மிகவும் உயரமாக வந்து எங்களது வீட்டை தாக்கியது. வீட்டுக்குள் வெள்ளம் வந்து விட்டது. கழுத்தளவு தண்ணீருக்குள் நாம் ஓடினோம். அப்போது எனது குழந்தையை கடல் அலை அடித்துச் சென்றது. நான், கணவன், மாமி, மாமா ஆகிய நால்வரும் கொன்றை மரங்களை கட்டிப் பிடித்துக் கொண்டதால் உயிர் பிழைத்தோம். எங்கள் குழந்தை மறுநாள் இறந்து கிடக்கக் காணப்பட்டது. நாங்கள் தும்பளையை சேர்ந்த இளைஞர்களினாற் காப்பாற்றப்பட்டு மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டோம். எனது கணவருக்கும் எனக்கும் வீட்டுசுவர் விழுந்ததில் காயம் ஏற்பட்டது" என்றார்.

மூன்றாவது நபரை அங்கு சந்திக்கிறேன். ஜெயகாந்தரூபன் தும்பளை கிழக்கு (வயது 35) கூறுகையில் :

"முதல் நாள் தொழிலுக்கு சென்று விட்டு சம்பவதினம் காலை கடற்கரையில் வலைபோட்டுக்கொண்டிருந்தபோது கடலில் வித்தியாசமான சத்தம் கேட்டது. என்னுடன் எனது தம்பி அவரது மனைவி, அண்ணாவின் பிள்ளைகள், அக்காவின் பிள்ளைகள் ஆகியோரும் வலை கோர்த்துக் கொண்டு இருந்தனர். இவர்கள் அனைவரும் கடல் அலையால் அள்ளுண்டு இறந்து விட்டனர்."

அழுது இன்னும் ஓயவில்லை

ஓ கடல்அன்னையே! இமைப்பொழுதில்
பெரும் அலையாய் வீறுகொண்டெழுந்து
எம் உறவுகளை பலி எடுத்து சென்றாயே
உனக்கு நாம் செய்த துரோகம் என்னம்மா?
அழுகின்றோம் அழுகின்றோம்
அழுது இன்னும் ஓயவில்லை!

எம் இரத்தத்தின் இரத்தங்களே
கடல் அலையால்
காணாமல் போன எம் சொந்தங்களே
எத்தனை யுகங்கள் சென்றாலும் உங்களை
மறப்போமா இந்த புவிதனில்?
அழுகின்றோம் அழுகின்றோம்
அழுது இன்னும் ஓயவில்லை!

நேற்றுவரை எம்முடன் வாழ்ந்த உடன்
பிறப்புக்களை பிரிந்து எப்படி வாழ்வது
இரக்கமில்லாத இதயம் கொண்ட கடல் தாயே
எம்மீது சீற்றம் கொண்டது ஏனோ?
அழுகின்றோம் அழுகின்றோம்
அழுது இன்னும் ஓயவில்லை!

இன்று சொத்து இழந்து சுகமிழந்து குழந்தைகளுடன்
அகதி முகாம்களில் உயிரை பிடிக்க கையேந்துகின்றோம்
எம் எதிர்காலம் என்ன? என்று தெரியாமல் தவிக்கின்றோம்
எத்தனை நாட்களுக்கு இப்படியொரு அவல வாழ்க்கை
என விழிக்கின்றோம்!
அழுகின்றோம் அழுகின்றோம்
அழுது இன்னும் ஓயவில்லை!

அன்று யுத்தத்தினால் அகதியானோம்
இன்று சுனாமி கடல் கொந்தளிப்பால் அகதியானோம்
உறவுகளை இழந்து கண்ணீரில் வாழ்கின்றோம்
நாளை எப்படியோ நாம் அறியோம் பராபரனே!
அழுகின்றோம் அழுகின்றோம்
அழுது இன்னும் ஓயவில்லை!

(சுனாமி இடம்பெற்று முதலாவது ஆண்டு
நிறைவையொட்டி வீரகேசரி வாரமலரில்
பிரசுரமான எனது கவிதை)



நூலாசிரியரைப் பற்றி...

வீரகேசரிப் பத்திரிகையின் புகழ்பெற்ற நிருபராகக் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக சிறப்பாகப் பணியாற்றி பல பாராட்டுக்களையும் பரிசுகளையும் பெற்றுக்கொண்ட கலைச்சுடர் என்.இராமச்சந்திரா அவர்கள் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் என்னும் கிராமத்தை தாயகமாகவும் மண்டைதீவுப் பகுதியை புகுந்த இடமாகவும் கொண்டவர். இவர் சிறந்த எழுத்தாளராகவும் பத்திரிகையாளராகவும் மற்றும் பக்தி இலக்கியங்கள் பலவற்றை பதிப்பித்து வெளியிட்டவர். அத்துடன் ஒரு புகழ் பூத்த தொழிற்சங்கவாதி. பல்முகப் பார்வை கொண்ட போற்றத்தகு மனிதராகவும் **திரு.இராமச்சந்திரா** அவர்கள் இருப்பதால் உண்மையான படிப்பினைகளைத் தரும் செய்திகளையும் ஆக்க இலக்கியங்களையும் வெளியிட்டு வருகின்றார். தற்பொழுது வெளியிட்டுள்ள "ஒரு கிராமத்தின் கண்ணீர் கதை" (செய்திக்கட்டுரைத் தொகுதி) என்ற நூலின் மூலம் அரிய பல தகவல்களை வெளியிட்டுள்ளார். வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் இவரது நீண்ட கால பத்திரிகைப்பணியைப் பாராட்டி இவருக்கு **"கலைச்சுடர்"** பட்டம் வழங்கி கௌரவித்துள்ளார். இவர் எழுதுவதையும் ஒரு சமூகப் பணியாக மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழறிஞர் கே.வி.குணசேகரம்
நல்லூர்க் கோட்டக் கல்விப்பணிப்பாளர்.

பிள்ளையார் அச்சகம், நல்லூர்.